விலை: 40.00
website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 128 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 13 செவ்வாய்க்கிழமை (26.04.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

## நல்லூர்க் கந்தனை தரிசித்த அமெரிக்கத் தூதுவர்



யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் நேற்றுக் காலை நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொண்டார்.

19ஆவது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு

## 21ஆவது திருத்தச் சட்டத்துக்கான யோசனைக்கு அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

நாட்டில் தற்போதுள்ள நெருக்கடிகளைத் தீர்ப்பதுடன், முன் வைக்கப்படும் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு தேவையான புதிய சீர்திருத்தங்களுடன் 20 மற்றும் 19ஆவது திருத்தச் சட்டங்களை அடிப் படையாகக் கொண்டு 15

400 ரூபாயால்

## சீமெந்து விலை இன்று முதல் அதிகரிப்பு

(கொழும்பு)

50 கிலோகிராம் எடை கொண்ட சீமெந்து பக்கற் ஒன்றின் விலை 400 ரூபாயால் அதிகரிக் 15

## ராஜபக்ஷ அரசாங்கம் கவிழ்ந்தே தீரும்

சரத் பொன்சேகா தெரிவிப்பு



(கொழும்பு)

"ராஜபக்ஷ அரசு ஆடிய ஆட்டங்கள் அடங்கப் போகின்றன. இந்த அரசைக் கவிழ்க்கும் எமது பிரேரணை வெல்லப்போகின்றது."

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி 15

# நெருக்கடியிலிருந்து மீள ஆதரவு வழங்குவேன்

## இடைக்கால அரசுக்கும் தயார் மகாநாயக்கர்களுக்கு ஜனாதிபதி கடிதம்

(கொழும்பு)

நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான அனைத்து முயற்சிகளுக்கும் ஆதரவு வழங்குவேன் என மகாநாயக்கர்களுக்கு ஜனாதிபதி கோட்டாபய கடிதம் எழுதியுள்ளார். மேலும் இடைக்கால அரசு அமைப்பதற்கு தயார் என்றும் தெரிவித்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

ரூ.125 மில்லியன்

## அவசர நிதி உதவிக்கு இத்தாலி அரசு தயார்

(கொழும்பு)

அந்நியச் செலாவணி பிரச்சினை மற்றும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கும் இலங்கைக்கு அவசர நிதி உதவி வழங்க இத்தாலி அரசாங்கம் முன் வந்துள்ளது. 15

## அலரிமாளிகை முன் தொடரும் போராட்டம்

பொலிஸாரின் கோரிக்கை நீதிமன்றத்தால் நிராகரிப்பு

(கொழும்பு)

அலரிமாளிகைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் குழுவினரை அப்புறப்படுத்தல் 15



## யாழைச் சேர்ந்த 15 பேர் தமிழகத்துக்கு இடம்பெயர்வு

06ஆம் பக்கம் பார்க்க

## சவப்பெட்டிகளுக்கும் நாட்டில் தட்டுப்பாடு

14ஆம் பக்கம் பார்க்க

## கடன் முடிவடைந்தால் அடுத்த மாதம் பஞ்சம்

ரணில் எச்சரிக்கை

09ஆம் பக்கம் பார்க்க

## சமகால நிலைமை தொடர்பில் தமிழ்த் தேசிய கட்சித் தலைவர்களுடன்



அமெரிக்கத் தூதுவர் பேச்சு

(யாழ்ப்பாணம்)

நாட்டின் பொருளாதார நெருக்கடி உட்பட நாட்டின் சமகால நிலைமைகள் தொடர்பில் தமிழ்த் தேசிய கட்சித் தலைவர்களுடன் அமெரிக்கத் தூதுவர் கலந்துரையாடியுள்ளார். 15

## பதவி விலகுகிறார் பிரதமர் மகிந்த?

(கொழும்பு)

தொடர் அழுத்தம் காரணமாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இன்று 15

## ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்தோரின் உறவுகள் பாப்பரசருடன் சந்திப்பு

(வத்திக்கான்)

இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் போது கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் வத்திக் 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் விஞ்ஞான பாட ஆசிரியர்
திரு. கி. சுதாகரன்
அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் கணபதிப்பிள்ளை கிருஷ்ணமூர்த்தி**


அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(11168)

மண்ணில் : 15.07.1939
விண்ணில் : 23.04.2022

கல்லூரிச் சமூகம்
யா / மகாஜனக் கல்லூரி - தெல்லிப்பளை.

# சவப்பெட்டி எரித்து போராட்டம்



கொழும்பு- காலி முகத்திடல் மைதானத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் நேற்று சவப்பெட்டிக்கு தீ வைத்து போராட்டம் நடத்தியுள்ளனர்.

ரம்புக்கனையில் இடம்பெற்ற அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்தின்போது உயிரிழந்த சமிந்த லக்சானின் நினைவாகவே குறித்த போராட்டத்தை மேற்கொண்டனர். (ம-7)

# உலகின் மிகவும் வயதான பெண் 119 ஆவது வயதில் காலமானார்



உலகின் மிகவும் வயதான பெண்ணாக கருதப்பட்ட ஜப்பானைச் சேர்ந்த கேன் டனகா காலமானதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இப்பெண் தமது 119ஆவது வயதில் காலமானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் 1903ஆம் ஆண்டு ஜனவரி 2ஆம் திகதி ஜப்பானின் தென்மேற்கு பகுதியில் பிறந்தார்.

1922ஆம்ஆண்டு திருமண வாழ்க்கையில் இணைந்த குறித்த பெண் 4 பிள்ளைகளின் தாயாவார்.

கடந்த 2019 ஆம் ஆண்டில், அவர் உயிருடன் இருக்கும் உலகில் மிகவும் வயதான பெண் என்ற கின்னஸ் சாதனையைப் படைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ம-7)


CCIY இன் 5வது இணையவழி கருத்தரங்கு

**வடமாகாணத்தின் மீன்பிடித் துறையில் நிலைபேறான அபிவிருத்தி**

(கடல்நீர் மீன்பிடித் துறையிலுள்ள வாய்ப்புக்கள் மற்றும் நன்னீர் மீன் வளர்த்தலை வெற்றியடையச் செய்தல்)




Mr. T. யூரிசன் ஜெனராஜ்
(CEO, CCIY)
B.Com.(Hons), MA.(Pub.Admin)

Mr. K. அகிலன்
(Fisheries Officer)
Department of Fisheries and Aquatic Resources, Jaffna.
B.Sc (Hons) Zoology,
M.Sc Aqu Bio Res Mgt

Mr. K. சிந்துஜன்
(Aquaculture Development Officer)
Fisheries Unit,
Ministry of Agriculture, NP
DFSC, University of Jaffna

(C-4243)

ஏற்பாட்டுக் குழு: யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்துறை மன்றம், இல 55, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

Supported by the german cooperation Federal Ministry for Economic Cooperation and Development | Coordinated by sequa | Implemented by OAV | Local Project Partner CCIY | cooperation partner AHK | BM Partnership

தொடர்புகளுக்கு: Tel: +9421 222 6609/ +9470 366 3603 Web:- www.cciy.lk Email:- info@cciy.lk


# புத்தூரில் அரசுக்கு எதிராக கவனயீர்ப்புப் போராட்டம்



கோட்டா, மகிந்த ஆட்சி வேண்டாம்! மக்கள் ஆட்சிக்கு வழி வகுப்போம்! எனும் தொனிப்பொருளில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் வட பிராந்தியச் செயலணியின் ஏற்பாட்டில் நேற்றுத் திங்கட்கிழமை (25.04.2022) மாலை 4.30 மணியளவில் புத்தூர் சந்தியில் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.

இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியினர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். போராட்டத்தின் ஒரு பகுதியாகப் பொதுமக்களுக்கு விழிப்புணர்வுத் துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன. (ம-7,18)

# மரண அறிவித்தல்



**கணேசு நடராசா**

( உரிமையாளர் - ஹப்பி ரெக்ஸ்ரைல் )

காரைநகரைப் பிறப்பிடமாகவும் நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட கணேசு நடராசா (நெல்லியடி ஹப்பி ரெக்ஸ்ரைல் உரிமையாளர்) நேற்று (25.04.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கணேசு - பாக்கியலட்சுமியின் அன்பு மகனும் கோகிலாதேவி, கிருஸ்ணராசா (காயத்திரி ரெக்ஸ்ரைல் - கொடிகாமம்), கிருஸ்ணதேவி (கீதா), பிரபாகரன் (துளசி தையல் நிலையம் - நெல்லியடி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நெல்லியடியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காரைநகர் நீலங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (C-4240)

இல. 39, மகாத்மா வீதி, நெல்லியடி, கரவெட்டி.
078 123 4666
077 832 9458
தகவல் குடும்பத்தினர்


# கணிதம்

தரம் 6 தொடக்கம் 11 வரையான வகுப்புக்கள் தனியாகவோ / குழுவாகவோ வீட்டில் வந்து கற்பிக்கப்படும். (11157)

077 712 2968


# கண்ணீர் அஞ்சலி



தென்மராட்சி கல்வி வலய யா/றிபேக் கல்லூரி
உடற்கல்வி ஆசிரியர் த. புஸ்பரட்ணம்
அவர்களின் பாசமிகு தந்தை

**அமரர் பொன்னையா தங்கவேலு**

அவர்கள் நேற்று (25.04.2022) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-4242)

உடற்கல்வித்துறை,
உதவிக் கல்வி பணிப்பாளர்,
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள்,
ஆசிரியர்கள் - தென்மராட்சி கல்வி வலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் தேசத்தின் மீதான அபகரிப்பு நீங்காது

## மூதூர் சம்பவம் குறித்து நாடு கடந்த தமிழீழ அரசு

(லண்டன்)

**இலங்கையில் எவ்வகை மாற்றம் நிகழ்ந்தாலும் தமிழர் தேசத்தின் மீதான அபகரிப்பு நீங்காது என்பதனையே மூதூர் சம்பவம் வெளிக்காட்டுவதாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.**

ஈழத்தமிழர்களின் பண்டைய அடையாளங்களில் ஒன்றான திருகோணமலை மூதூர் 64 ஆம் கட்டையில் உள்ள இராஜவந்தான் மலையில் மாணிக்கப் பிள்ளையார் ஆலயம் அழிக்கப்பட்டு வருவதோடு பௌத்த சின்னங்களை நிறு வுவதற்கான வேலைப்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த சனிக்கிழமை தமிழ் மக்கள் மற்றும் சைவ குருமார்கள் பண்டைய வழிபாட்டுத் தளத்திற்குச் சென்ற போது, பௌத்த பிக்கு ஒருவர் பொலிஸ் மற்றும் புலனாய்வாளர்கள் சகிதம் அவர்களை தடுத்து நிறுத்தி அச்சுறுத்தி உள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் கருத்தினை வெளியிட்டுள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சு,

இலங்கையில் ஆட்சியாளர்களுக்கு எதிராக தென்னிலங்கையில் போராட்டங்கள் இடம்பெற்று வருவதோடு, ஆட்சி மாற்றம், அமைச்சரவை மாற்றம், அரசியலமைப்பு மாற்றம், 21ஆம் திருத்தச்சட்டம் என பல மாற்றங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

தமிழர் தாயக மக்களையும் தென்னிலங்கை போராட்டத்தோடு பயணிக்குமாறு அழைப்புக்கள் விடுக்கப்பட்ட போதும், தமிழ்மக்கள் மௌனமான முறையில் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் மூதூர் சம்பவமானது, பொருளாதார நெருக்கடியினால் சிக்குண்டுள்ள தென்னிலங்கை, அதில் இருந்து மீளுவதற்கு பல மாற்றங்களை முன்வைத்திருந்தாலும், அதன் அரச இயந்திரம் (கட்டமைப்பு) தமிழர் தேசத்தின் மீதான ஆக்கிரமிப்பு, அபகரிப்பு ஓயாது என்பதையே வெளிக்காட்டுகின்றது என அந்த அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-6)

# புலமைப்பரிசில் பரீட்சை வெட்டுப்புள்ளி விரைவில்

(கொழும்பு)

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், மே மாதம் முதல் வாரத்தில் வெட்டுப்புள்ளிகளை வெளியிடக்கூடியதாக இருக்கும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இப்பணிகள் தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக பாடசாலை விவகாரங்களுக்கு பொறுப்பான மேலதிக செயலாளர் லலிதா எகொடவெல தெரிவித்தார்.

பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் பிரபல பாடசாலைகளுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்படும் என்றும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (நி-6)


# மீள் கேள்வி அறிவித்தல்
# நல்லூர் பிரதேச சபை

**Local Development Support Project -PT-1 - CREDIT NUMBER – P 163305**
**IMPROVEMENTS OF KARAIMUNANGU CREMATORIUM AT ARIYALAI**
**(LDSP/PT-1/NP/JAF/NPS/2022/04/KAR-CRE)**

01. தலைவர் பெறுகைக்குழு நல்லூர் பிரதேச சபை கொக்குவில் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ் குறிப்பிட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வேலைகளுக்காக கோருகின்றார்.
02. தேசிய போட்டிக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 09.10.2020 ஆம் திகதி 03/2020 ஆம் இலக்க, 11.01.2021 ஆம் திகதி 03/2020 (i) ஆம் இலக்க, நிதிச்சுற்றறிக்கைகள் பொருந்தும்.
03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் த்ரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் '**தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில்** எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் - 021-222-2700) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் **தலைவர் பெறுகைக்குழு நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் என்னும் இடத்திலிருந்து 2022.04.26 ஆம் திகதியிலிருந்து 2022.05.17 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப.3.00 வரையும்** மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** என்னும் முகவரிக்கு 2022.05.18 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கேள்வி பிணை வைப்புத் தொகையினை கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வங்கியில் செலுத்தி அதன் உண்மைப் பிரதியினை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.


| இல | ஒப்பந்த இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி செல்லுபடியாகும் காலம் | கேள்வி பிணை வைப்பு | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | தொகை (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| 01 | LDSP/PT-1/NP/JAF/NPS/2022/04/KAR-CRE | IMPROVEMENTS OF KARAIMUNANGU CREMATORIUM AT ARIYALAI | 2.700 | 90 நாட்கள் | C8 or Above (Building) | 63 Days | 28,000.00 | 17.08.2022 |

09. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் 2022.05.11 ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் மு.ப. 10.00 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்திற்கு ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்து கொள்ள முடியும்.

**தலைவர்**
**உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு,**
**நல்லூர் பிரதேச சபை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் கந்தனை தரிசித்த அமெரிக்க தூதர் ஜூலி சுங்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ள அமெரிக்க தூதர் ஜூலி சுங் நேற்று நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் வழிபாடு மேற்கொண்டார். (நி-6-18-33)

# அதிகரிக்கும் இருதய நோயாளர்கள்

(கொழும்பு)

நாட்டில் நிலவும் நெருக்கடி காரணமாக இருதய நோயாளர் களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக கொழும்பு தேசிய மருத்துமனையின் இரு தய நோய் மருத்துவ நிபுணர் கோட்டாபய ரணசிங்க தெரி வித்துள்ளார்.

இதன்படி மேல் மாகாணத்தில் மாத்திரம் பதிவாகும் இருதய நோயாளர்களின் எண்ணிக்கை 30 தொடக்கம் 40 சதவீதம் வரை அதிகரித்துள்ளதாகவும் இந்த நிலைமையை புரிந்துணர்வுடன் எதிர்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-6)

# இடைக்கால அரசாங்கத்தை அமைக்க சந்திரிகா யோசனை முன்வைப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பிரதமர் தலைமையிலான இடைக்கால அரசாங்கத்தை ஆறு மாதங்களிற்கு ஏற்படுத்துவதற்கான யோசனையை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமார துங்க முன்வைத்துள்ளார்.



நாட்டில் தற்போது காணப்படும் அரசியல் முட்டுக்கட்டை நிலையை முடிவிற்கு கொண்டு வருவதற்காக அவர் இந்த யோசனையை முன்வைத்துள்ளார். (நி-6)

# ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டி கழுகுகள் அணி சம்பியன்



ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் கழுகுகள் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர். இதன் இறுதியாட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஸ்பைடர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் கழுகுகள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பருத்தித்துறை சென் தோமஸ் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பருத்தித்துறை சென் தோமஸ் அணி 10 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 100 ஓட்டங்களைப் பெற்றனர். அவ் வணி சார்பில் அருள் ரஞ்சன் 5 ஆறு ஓட்டங்கள், 1 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 39, ஓட்டங்களையும், ஜீபகாந் 5 ஆறு ஓட்டங்கள், 1 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 38 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் கழுகுகள் அணி சார்பில் துவா, தர்சன், வனஜன் ஆகியோர் தலா இவ்விரு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கழுகுகள் அணி 9.3 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றனர். அவ்வணி சார்பில் செந்தூரன் 4 ஆறு ஓட்டங்கள், 3 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 41 ஓட்டங்களையும், வனஜன் 3 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 20 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி சார்பில் பிரசாந், அகிலன் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். (4-90)

# பெண்களுக்கான கிரிக்கெட் போட்டி பரு. ஐக்கிய விளையாட்டுக்கழக அணி சம்பியன்



பரபரப்பான பெண்களுக்கான கிரிக்கெட் இறுதியாட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர்.

இதன் இறுதியாட்டம் நேற்று முன்தினம் ஸ்பைடர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பருத்தித்துறை சென்தோமஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி 5 ஓவர்கள் கொண்ட பந்துப் பரிமாற்றத்தில் ஓர் விக்கெட்டை மாத்திரம் இழந்து 111 ஓட்டங்களைப் பெற்றனர்.

அவ்வணி சார்பில் நிரோசினி ஒரு 6 ஓட்டம், 7 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 46 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் பருத்தித்துறை சென் தோமஸ் அணி சார்பில் றொசானா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பருத்தித்துறை சென்தோமஸ் அணி ஒரு விக்கெட் இழப்பிற்கு 86 ஓட்டங்களை மாத்திரம் பெற்றனர்.

அவ்வணி சார்பில் அனிஸ்ரினி 3 ஆறு ஓட்டங்கள், 8 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 57 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் பருத்தித்துறை ஐக்கிய அணி சார்பில் நிரோசினி ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார். (4-90)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2601

**தர்சினி**




**யுவராஜ்**




**சயந்தன்**




**பிரியங்கா**




**வர்மா**




**பவிதா**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 2021 ஆம் ஆண்டு உயர்நிலையில் தேர்ச்சி பெற்ற ரண் கெகுளு கணக்குகளுடைய பிள்ளைகளுக்கு**

இலங்கை வங்கியால் இம்முறையும்

**மொத்தம் 30 மில்லியன் ரூபா பெறுமதி மிக்க 2000 புலமைப் பரிசில்கள்**

### ரண் கெகுளு புலமைப்பரிசில் மற்றும் PFCA* Minor கணக்குகள் புலமைப் பரிசுகளுக்கு விண்ணப்பிக்க தேவையான தகைமைகள்

- 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் மாவட்ட வெட்டுப் புள்ளிக்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- ரண் கெகுளு அல்லது **PFCA* Minor** கணக்குகளையுடைய பிள்ளைகளாக இருத்தல் வேண்டும்.
- 2022 மார்ச் 12 ஆம் திகதிக்கு முன் ரண் கெகுளு கணக்குகளையுடைய பிள்ளைகளின் கணக்கில் குறைந்தபட்ச மீதி ரூ.5,000/- இற்கு குறையாதிருத்தல்.
  **(விண்ணப்பதாரிகளுக்கிடையே தெரிவு செய்யப்படும் அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற, 2000 பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்கள்)**
- **PFCA* Minor** கணக்குகளையுடைய பிள்ளைகளின் கணக்கு மீதியானது புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகிய 2022 மார்ச் 12 ஆம் திகதிக்கு ஆகக் குறைந்தது USD 250 அல்லது அதற்குச் சமனான வகையில் வெளிநாட்டு நாணயத்தில் பேணியிருக்க வேண்டும்.
  **(விண்ணப்பதாரிகளுக்கிடையே தெரிவு செய்யப்படும், அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற 100 பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்கள்)**

### விசேட பரிசுகளுக்கான தகைமைகள்

- ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் மாவட்ட வெட்டுப்புள்ளிக்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- ரண் கெகுளு அல்லது **PFCA* Minor** கணக்குகளையுடைய பிள்ளைகளாக இருத்தல் வேண்டும்.
- ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகிய 2022 மார்ச் 12 ஆம் திகதிக்கு முன் கணக்கு ஆரம்பிக்கப்பட்டு செயற்பாட்டில் இருந்திருக்க வேண்டும்.
- விண்ணப்பப் படிவங்களை BOC இணையத்தளம் மற்றும் இலங்கை வங்கிக் கிளைகளிலிருந்து பெற்றுக் கொள்ள முடிவதோடு, மேற்படி தகைமையுடையவர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தோடு பரீட்சைப் பெறுபேறு சான்றிதழின் பிரதியொன்றையும் இணைத்து எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் கையளிக்கலாம்.
- விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக்கொள்ளும் கடைசித்திகதி 2022 மே 15 ஆகும்.
  அதற்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(C-1698)

*2017 நவம்பர் 20 ஆம் திகதிக்கு முன்னர் NRFC Minor / RFC Minor / RKFC போன்ற பெயர்களில் ஆரம்பிக்கப்பட்ட கணக்குகள்.

1975 BOC CALL CENTRE

www.boc.lk

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழைச் சேர்ந்த 15 பேர் இந்தியாவில் தஞ்சம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆனைக் கோட்டை மற்றும் காக்கைதீவு பிரதேசங்களைச் சேர்ந்த 5 குடும்பங்களைச் சேர்ந்த 9 மாத குழந்தை உள்ளிட்ட 15 பேர் நேற்றுத் திங்கட்கிழமை தனுஷ்கோடியை அண்மித்த கோதண்டராமர் கோவில் கடற் கரை பகுதியை சென்றடைந்துள்ளனர்.

அது தொடர்பில் தகவல் அறிந்த இராமேஸ்வரம்கடலோர பாதுகாப்பு பொலிஸார் இவர் களை மீட்டு மண்டபம் கடலோர பாதுகாப்பு பொலிஸ் நிலை யத்தில் வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கையில் பட்டினி சாவு ஏற்பட்டு, அனைவரும் உயிரிழக்க நேரிடும். எனவே உயிரை காப்பாற்றி கொள்ள தமிழகத்திற்கு அகதிகளாக வந்ததாக அவர்கள் தெரிவித்த னர்.

கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதி முதல் நேற்று வரை 75 இலங்கை தமிழர்கள் அகதிக ளாக தமிழகம் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-33-104)

## நீக்கிலார் ஆலய வருடாந்த திருவிழா

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை புனித நீக்கி லார் ஆலய திருவிழா கடந்த 20 ஆம் திகதி ஆரம்பமாகிய நிலையில் தொடர்ந்து 9 தின ங்கள் நடைபெறவுள்ளது.

அந்த வகையில் நாளை மறுதினம் 28 ஆம் திகதி மாலை திருநெற்கருணை பவ னியும் மறுநாள் காலை புனித ரின் திருவிழா பாடற்பூசையும் வழிபாடுகளும் யாழ். மறை மாவட்ட ஆயர் கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து திருச் சொரூப தேர்ப் பவனியும் இடம் பெறும். (4-6)

## ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

தீம்புனலின் முதலாம் ஆண்டு விழா எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு பருத்தித் துறை பிரதான வீதியில் அமை ந்துள்ள சூரிய மஹாலில் ஏ.ரவி வர்மா தலைமையில் நடை பெறவுள்ளது. (4-6)

## வீடு புகுந்து மோ.சைக்கிளின் தலைக்கவசம் திருட்டு

(குப்பிழான்)

வீட்டிற்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார்ச் சைக்கிளில் காணப்பட்ட புதிய தலைக் கவசம் திருடிச் செல்ல ப்பட்டுள்ளது. குறித்த சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு குப்பிழான் தெற்கு வீரமனைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இரவு 7.40 மணி முதல் இரவு 9 மணி வரை மின்சாரத் தடை ஏற்பட்டிருந்த சந்தர்ப்பத்தி லேயே குறித்த சம்பவம் நடந் துள்ளது. (4-6-18)

# இளைஞர்கள் மீது தாக்குதல் நடத்திய மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் வீதியால் சென்ற இளைஞர்கள் மீது தாக் குதலை மேற்கொண்ட குற்றச் சாட்டில் மூன்று இளைஞர் களை இளவாலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் இளவாலை சென்யூட் பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் மது போதையில் நின்ற இளைஞர் குழு ஒன்று வீதியால் சென்ற வர்களுடன் தர்க்கம் புரிந்து தாக்குதல்களையும் மேற் கொண்டிருந்தனர்.

குறித்த கும்பலின் தாக்கு தலில் காயமடைந்த 4 பேர் தெல்லிப்பழை மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு இருந்தனர். இச்சம்பவம் தொடர்பில் விசார ணைகளை முன்னெடுத்த இளவாலை பொலிஸார் மாரீ சன் கூடல் பகுதியை சேர்ந்த மூன்று இளைஞர்களைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள மூன்று இளைஞர்களையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணை களை முன்னெடுத்து வரு கின்றனர். (4-6-33)

## பரிசில் நாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யா/கோவிலாக்கண்டி மகா லட்சுமி வித்தியாலய பரிசில் நாள் நிகழ்வு நாளை 27 ஆம் திகதி மதியம் 1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் க.தேவநேசன் தலை மையில் நடைபெறவுள் ளது. (4-6)

## புகையிலைச் செய்கை அறுவடை

(யாழ்ப்பாணம்)

புகையிலைச் செய்கையின் அறுவடை தற்போது யாழ். வலிகாமத்தில் மும்முரமாக இடம்பெற்று வருகிறது.

இரசாயன உர இறக்கு மதிக்கான தடை மற்றும் போதியளவு பூச்சி கொல்லிகள் கிடைக்காமையால் இம்முறை புகையிலைச் செய்கையாள ர்கள் பாதிப்பினை எதிர்கொண் டுள்ளனர்.

அத்துடன் புகையிலையின் விலையிலும் தற்போது பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (4-6-18)

# அஞ்சலியும் நினைவுப் பேருரையும்

(குப்பிழான்)

தந்தை செல்வாவின் 45 ஆவது நினைவுநாள் அஞ்ச லியும் நினைவுப் பேருரையும் நிகழ்வு இன்று செவ்வாய் க்கிழமை யாழில் இடம்பெற வுள்ளது.

அஞ்சலி நிகழ்வு நாளை காலை 9.30 மணியளவில் யாழ்.நகரில் அமைந்துள்ள தந்தை செல்வா நினை விடத்தில் தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழு வின் தலைவரும், ஓய்வுநிலை ஆயருமான கலாநிதி. சு.ஜெப நேசன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து முற்பகல் 10 மணியளவில் யாழ்.மத்திய கல்லூரியில் அமைந்துள்ள தந்தை செல்வா கலையரங்கத்தில் நினைவுப் பேருரையும், புத்தக வெளி யீடும் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பேராதனைப் பல் கலைக்கழகப் பொருளியல் துறைப் பேராசிரியர் சங்கரன் விஜேசந்திரன் "தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலா சைகளும் அரசியல் தீர்வை நோக்கிய முன்னெடுப்புக்க ளும்" எனும் தலைப்பில் நினைவுப் பேருரை நிகழ்த் துவார். (4-6-18)



நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் தெய்வீகத்திருக்கூட்டம் தொடர் நிகழ்வின் மூன்றாவது நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நல்லை ஆதினக் கலா மண்டபத்தில் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளின் தலைமையில் இடம் பெற்றது. (படங்கள்-சிவசாந்தன்)

# இராசிபலன்

26.04.2022
சித்திரை 13, செவ்வாய்க்கிழமை
ஏகாதசி பின்னிரவு 2.58 மணிவரை
சதயம் முன்னிரவு 7.07 மணிவரை

சுபநேரம் 10.29-11.59 மணிவரை
இராகுகாலம் 2.59-4.29 மணிவரை
ஏகாதசி விரதம்,

திருநாவுக்கரசர் குருபூசை
சந்திராஷ்டமம்: புனர்பூசம், பூசம்

வளவன்

**மேஷம்** – எதிர்காலம் இனிமை யாக அமைய திட்ட ங்கள் தீட்டுவீர்கள், குடும்பத்தில் கல கலப்பான சூழ்நிலை உருவாகும், பொருளாதார நிலையில் முன் னேற்றம் காணும் நாள்.

**கடகம்** – உதவுவதாகச் சொன் னவர்கள் உங்களை விட்டு விலகலாம், மகி ழ்ச்சி குறையாதிக்க மற்றவரை அனுசரித்து செல்வது நல்லது, வழிபாட்டால் மகத்து வம் காண வேண்டிய நாள்.

**துலாம்** – வியாபார விருத்தி யுண்டு, எதிர்பார் ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், பிள்ளைகளின் நலனில் அக்கறை கூடும் நாள்.

**மகரம்** – தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், சொன்ன சொல்லைக் காப்பா ற்றி மகிழ்வீர்கள், கல்யாணக் கன வுகள் நனவாகும், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**ரிஷபம்** – தொலைபேசி வழியில் பொன்னான செய்தி கள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள்.

**சிம்மம்** – சந்தித்த நபர்களால் சந்தோசம் கிடைக் கும் நாள், மனதில் நினைத்த புதிய திட் டங்களை நிறைவேற் றுவீர்கள், போசன சுகமுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**விருச்சிகம்** – வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், வருங் கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூ டும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**கும்பம்** – உடல் நலனில் கவனம் தேவை, உறவினர்களின் சந்திப்புக்கள் இடம்பெற லாம், மறக்க முடியாத இனிய சம்பவங்கள் இடம்பெறலாம், கற்பனை மிகுதியான நாள்.

**மிதுனம்** – உங்களின் கடின உழை ப்பை மற்றவர்கள் வியப் பாக பார்ப்பர், கோரிக் கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், பொல்லா தவர்கள் உங்களை விட்டு விலகலாம்.

**கன்னி** – எதிர்பார்த்த சலு கைகள் இயல்பாகவே வந்து சேரும், உடல் நலன் சீராகும், கூட்டு முயற்சியில் முன்னேற்றம் காண்பீர்கள், செய் தொழில் மேன்மையுண்டு.

**தனுசு** – குடும்பத்தில் குதூக லம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பாகப் பிரிவினைகள் சுமுக மாக அமையும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**மீனம்** – உறவினர் விவகாரங் களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது, தூரதேசத்தில் இருந்து ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருத்தியை நீ அடையும் வரை அவள் கவர்ச்சியாகத்தான் இருப்பாள்

# வெளிநாடு

# ஸ் ஜனாதிபதித் தேர்தலில் ரான் மீண்டும் வெற்றி



**ாதிபதி தேர்தலில் இம்மானுவேல் மக்ரோன் வெற்றி பெற்று, ண்டுகள் ஜனாதிபதியாக பதவியைத் தொடரவுள்ளார். கருத்துக் ல் கணிக்கப்பட்டதை விட அதிக வாக்குகளை மக்ரோன்**

வேட்பாளரான மரைன் லு பென் 41.45% வாக்குகளை சுவீகரித்தார்.

இப்போது தேர்தல் முடிந்து விட்டது. இனி அனைவருக்குமான ஜனாதிபதியாக இருப்பேன்.

அரசியல் ரீதியில் பிளவுபட்டுள்ள பிரான்ஸை மீண்டும் ஒருங்கிணைப்பேன் என ஈபிள் கோபுரத்தின் அடிவாரத்தில் மகிழ்ச்சியுடன் கூடிய ஆதரவாளர்களிடம் மக்ரோன் தெரிவித்தார்.

கடந்த 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற முதல் சுற்று வாக்குப் பதிவில் அதிக வாக்குகளைப் பெற்ற இம்மானுவேல் மக்ரோன் - மரைன் லு பென் ஆகியோர் நேற்று முன்தினம் இரண்டாவது சுற்று வாக்குப் பதிவு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## ளின் எதிர்ப்பை மீறி ி இறக்குமதியை க்கும் சீனா

இதன் மீதான இறக்குமதி மார்ச் மாத்தில் 1.4 மில்லியன் தொன்னாக உயர்ந்துள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பிற்குப் பிறகு ஜப்பான் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற கொள்வனவாளர்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்த அல்லது தடைசெய்ய வழிவகுத்தது.

இந்த நிலையில் மொஸ்கோவுடன் இணைந்து பணியாற்றும் பீஜிங்கின் விருப்பம் மேற்குலகில் விரக்தியை ஏற்படுத்தும் என றொய்ட்டர்ஸ் செய்தி சேவை குறிப்பிட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக நிலக்கரி இறக்குமதி ஆண்டுக்கு 31 சதவீதம் சரிந்துள்ளது.

இது மின் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் அனல் நிலக்கரிக்கான தேவை வீழ்ச்சியாகும். நிலக்கரி என்பது சீனாவில் மிகவும் பொதுவான எரிசக்தி மூலமாகும்.

சமீபத்திய தசாப்தங்களின் பயன்பாட்டைக் குறைப்பதற்கான முயற்சிகள் இருந்த போதிலும் மொத்த நுகர்வில் பாதிக்கும் மேலானதாகவே இன்னும் உள்ளது. சீனா உள்நாட்டு நிலக்கரிச் சுரங்கத்தை முடக்கி விட நடவடிக்கை எடுத்தாலும் வெளிநாட்டு இறக்குமதியை நம்பியிருக்க வேண்டிய கட்டாயத்தில் சீனா உள்ளது. மேற்குலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி ரஷ்யாவிலிருந்து எரிசக்தி இறக்குமதியை மேலும் அதிகரிக்க சீன அதிகாரிகள் பரிசீலித்து வருகின்றனர்.

கடந்த மாதம் ரஷ்யாவிலிருந்து 321, 380 தொன் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுவை இறக்குமதி செய்தது. மொஸ்கோவுடன் இணைந்து பணியாற்ற பீஜிங்கின் விருப்பம் மேற்குலக நாடுகளில் விரக்தியை ஏற்படுத்தும் ஏனெனில் இது கடந்த இரண்டு மாதங்களில் தொடங்கப்பட்ட பொருளாதாரத் தடைகளின் செயற்றிறனைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது. (நி-6)

## உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி அமெரிக்க உயர் அதிகாரிகளுடன் சந்திப்பு



(கீவ்)

அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர், பாதுகாப்பு செயலர் ஆகியோரை உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி சந்தித்தார் என அந்நாட்டு ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து இரு மாதங்களைக் கடந்துள்ளது. மரியுபோலில் வெற்றி பெற்றதாக ரஷ்ய ஜனாதிபதி புடின் அறிவித்தாலும் அங்கு சண்டைகள் தொடர்ந்து நடந்து வருகின்றன. நகரத்தை கைப்பற்றுவதற்கான ரஷ்யாவின் முயற்சிகள் ஏமாற்றம் அளிக்கின்றன. இந்நிலையில், அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் ஆண்டனி பிளிங்கன் மற்றும் அமெரிக்க பாதுகாப்பு செயலர் லாயிட் ஆஸ்டின் ஆகியோர் உக்ரைன் தலைநகர் கீவுக்கு வருகை தந்தனர். அவர்களை உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலன்ஸ்கி நேற்று சந்தித்தார் என அந்நாட்டு ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கு இடையிலான போரை நிறுத்த வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் சபை பொதுச்செயலாளர் ஆன்டனியோ குட்டரேஸ் இன்று மொஸ்கோ செல்கிறார்.

அங்கு ஜனாதிபதி புடின் மற்றும் வெளியுறவு மந்திரி செர்ஜி லாவ்ரோவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)

## தண்ணீர், உணவுக்காக சூடானில் கலவரம்

### 168 பேர் உயிரிழப்பு



(சூடான்)

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சூடானில் தண்ணீர், உணவு உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளுக்காக அரபு மொழி பேசுபவர்களுக்கும், வேற்று மொழி பேசும் சிறுபான்மைக் குழுக்களுக்கும் இடையே பயங்கர மோதல் ஏற்பட்டுள்ளது. இந்தக் கலவரத்தில் 168 பேர் உயிரிழந்துள்ளனர்.

சூடானில் 2019 ஆம் ஆண்டு அதிபர் ஒமர் அல் பஷீரின் சர்வாதிகார ஆட்சி மக்கள் போராட்டத்தின் காரணமாக அகற்றப்பட்டது. அதன் பிறகு, புதிய அரசை அமைக்க ஜனநாயக ரீதியிலான வழிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டு வந்த நிலையில் அங்கு அதிகாரத்தை இராணுவம் கைப்பற்றியது. இதற்கு எதிராக சூடானில் தொடர்ந்து மக்கள் புரட்சி நடைபெற்று வருகிறது. இதில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், தொடர் மக்கள் புரட்சி காரணமாக சூடானின் பல இடங்களில் கடுமையான பஞ்சம் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன் காரணமாக, உணவு, தண்ணீர், கால்நடைகள், வளம் நிறைந்த இடங்கள் ஆகியவற்றைக் கைப்பற்ற அரபு மொழி பேசும் பழங்குடி மக்களுக்கும், வேற்று மொழிகளை பேசும் சிறுபான்மை பழங்குடிக் குழுக்களுக்கும் இடையே அண்மைக் காலமாக பயங்கர மோதல் நடந்து வருகிறது.

அந்த வகையில், நேற்று முன்தினம் சூடானில் உள்ள மேற்கு டார்ஃபூர் பகுதியில் இருதரப்புக்கும் இடையே கடுமையான சண்டை நடைபெற்றது.

வீடுகளும், கால்நடை பண்ணைகளும் சூறையாடப்பட்டன. பலர் கொல்லப்பட்டனர். ஏராளமானோர் உயிரிழந்தனர். இந்த வன்முறையில் இது வரை 168 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 300 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிநீர் இன்றி அல்லலுறும் ஆனந்தபுரம் கிராம மக்கள்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஆனந்தபுரம் கிராம மக்கள் குடிநீரின்றி பன்னெடுங்காலமாக பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்

குறித்த கிராமத்தில் நிலத்தடி நீர் உவர் நீராக காணப்படுகின்ற காரணத்தினால் குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் மக்கள் பல்வேறு இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். மிக நீண்ட காலமாக இந்த குடிநீர் பிரச்சினையை எதிர்கொண்டு வந்த மக்களுக்கு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் முதலாவது குடிநீர் திட்டமாக ஆனந்தபுரம் தெரிவு செய்யப்பட்டு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரால் கூட்டங்கள் 2017 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டன.

இதன் பின்னர் குறித்த பகுதிகளுக்கான நீர் இணைப்பு வேலைகள் படிப்படியாக முன்னெடுக்கப்பட்டு கடந்த 4 மாதங்களுக்கு முன்னர் அனைத்து நடவடிக்கைகளும் நிறைவடைந்து ஒரு நாள் நீர் வழங்கப்பட்டு நீரக் குழாய்கள் சுத்திகரிக்கப்பட்ட நிலைமையின் பின்னரும் இன்று வரை அந்த குழாய் நீர் ஊடாக குடிநீர் கிடைக்கவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்

இதனால் பல்வேறு இன்னல்களை முகங்கொடுத்து வருவதாகவும் தமக்கு நீர் இணைப்புகள் வழங்கப்பட்டும் பயனில்லை எனவும் மிக விரைவாக நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் குடிநீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

குறித்த விடயம் தொடர்பில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அதிகாரி ஒருவரை தொடர்பு கொண்டு வினவிய போது குறித்த பகுதிக்கான நீர் இணைப்பு வேலைகள் இடம்பெற்று உள்ளதாகவும் நீர் குழாய்கள் சுத்தம் செய்கின்ற வேலைகள் இடம்பெற்று வரு வதாகவும் இந்தப் பகுதிக்கு நீரை எடுத்து வருகின்ற ஆரம்பப் பகுதியில் இருக்கின்ற மந்துவில் பிரதேசத்தில் தற்போது இணைப்புகள் மக்களுக்கு வ்ழங்கப்பட்டு வருகின்ற நிலையில் வருகிற மாதம் அளவில் இவர்களுக்கான குடிநீர் வழங்கக்கூடிய நிலைமை இருக்கும் என தெரிவித்தார். (4-6-281)



யா/மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயத்தின் தரம்-05 புலமைச் சாதனையாளர் கௌரவிப்பு வைபவம் கடந்த சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்:-சுபேசன்)

## மல்லாவி மருத்துவமனைக்கு

# சட்ட மருத்துவ அதிகாரியை நியமிக்குமாறு கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மல்லாவி ஆதார மருத்துவமனைக்கான சட்ட மருத்துவ அதிகாரியை இதுவரை நியமிக்காமையினால் உயிரிழந்தவர்களின் சடலங்களை உறவினர்கள் பெற்றுக் கொள்வதில் பெரும் இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர்.

இதேவேளை சுமார் 110 கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பால் உள்ள மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டு சென்று உடற்கூற்றுப் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டிய நிலை காணப்படுவதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே குறித்த மல்லாவி மருத்துவமனைக்கு சட்ட மருத்துவ அதிகாரியை நியமிக்கு மாறும் குறித்த பிரதேசங்களுக் கான திடீர் மரண விசாரணை அதிகாரிகளை நியமிப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்களும்.பொது அமைப்புக்களும் கோரியுள்ளனர். (4-6-315)



இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சுங் நேற்று யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்டீன் பெர்னாட் ஞானப்பிரகாஷம் ஆண்டகையை சந்தித்து கலந்துரையாடினார்.

அத்துடன் வடமாகாண ஆளுநரையும் சந்தித்து கலந்துரையாடினார். குறித்த சந்திப்பில் யாழ்ப்பாணத்திலுள்ள தற்போதைய நிலைமைகள் மற்றும் சமகாலப் போக்குகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (படங்கள்:-சிவசாந்தன்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 340 | 300 | 400 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 250 |
| தக்காளி | 280 | 250 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 120 | 120 |
| கோவா | 100 | 120 | 120 |
| கரட் | 160 | 150 | 200 |
| பூசணி | 80 | 60 | 80 |
| புடோல் | 180 | 140 | 160 |
| வாழைக்காய் | 60 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 350 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 200 |
| பாகற்காய் | 400 | 300 | 400 |
| வெண்டிக்காய் | 150 | 140 | 200 |
| கருணைக் கிழங்கு | 140 | 180 | 200 |
| பயற்றங்காய் | 200 | 220 | 120 |
| லீக்ஸ் | 140 | 140 | 160 |
| பீற்றூட் | 160 | 180 | 200 |
| கறிமிளகாய் | 200 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 800 | 700 | 800 |
| போஞ்சி | 380 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 320 | 250 | 360 |
| கீரை - 1 பிடி | 140 | 100 | 150 |
| தேசிக்காய் | 350 | 250 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 200 | 200 |
| வெங்காயப்பூ | — | — | — |
| முள்ளங்கி | 80 | 110 | 240 |
| பொன்னாங்காணி | 60 | 70 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 40 |
| ஈரப்பலா | — | — | — |



அமரர்.செபமாலை ஜெறின்சனின் முதலாம் ஆண்டு நினைவாக நாவாந்துறை சென்.மேரிஸ் இளைஞர் கழகம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்த வங்கிப் பிரிவின் அனுசரணையில் நடத்திய மாபெரும் இரத்ததான முகாம் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நாவாந்துறை புனித பரலோக மாதா ஆலய முன்றலில் நடைபெற்றது. (படம்:-ரவிசாந்)

# குழு மோதல் நால்வர் காயம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட போக்கட்டிப் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் நால்வர் காயமடைந்துள்ளனர்.

இதில் வெள்ளாம் போக்கட்டி கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த 17,22,19 மற்றும் 53 வயதுடைய நால்வர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் அதில் ஒருவர் மதுத்துவமனையில் இருந்து தப்பித்துச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த மோதல் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)

# மோட்டார் சைக்கிள் திருட்டு

(அராலி)

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்லுண்டாய் வைரவர் கோவில் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று நேற்றிரவு கொள்ளையிடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

அராலி வடக்கினை சேர்ந்த ஒருவர் வேலை முடிந்து வீட்டிற்கு வரும் வழியில் மோட்டார் சைக்கிளை இயக்க நிலையில் வைத்து விட்டு கல்லுண்டாய் வைரவர் கோவிலை தரிசித்துக் கொண்டிருந்தார்.

இதன்போது அப்பகுதியில் நின்ற ஒருவர் மோட்டார் சைக்கிளை திருடிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


இச்சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.(4-6-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன் திட்டம் முடிவடைவதால் அடுத்த மாதம் கடும் பஞ்சம் ஏற்படும்

## முன்னாள் பிரதமர் ரணில் எச்சரிக்கை



(கொழும்பு)

**எரிபொருளுக்காக வழங்கப்பட்ட இந்தியக் கடன் வசதி மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கான ஒரு பில்லியன் டொலர் கடன் திட்டம் முதல் வாரத்தில் முடிவடைவதால் அடுத்த மாதம் இலங்கை பாரிய பிரச்சினையை எதிர் கொள்ள வேண்டியிருக்கும் என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை விடுத்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற தனியார் வங்கியாளர்கள் குழுவுடனான கலந்துரையாடலின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் எதிர் வரும் காலங்களில் கடுமையான உணவுத் தட்டுப்பாடு ஏற்படக் கூடும். மக்கள் கோரும் புரட்சிகரமான மாற்றத்திற்கு அரசு செவிசாய்க்க வேண்டும்.

அரசாங்கத்தை உடனடியாகப் பதவி விலகுமாறு கோரி இளைஞர்கள் உட்பட பொது மக்கள் வீதியில் இறங்கிய போதிலும் பாராளுமன்றம் உரிய தீர்வை வழங்கத் தவறியுள்ளது எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (நி-6)

## இலங்கை மக்களின் அமைதியான போராட்டங்களால் ஈர்க்கப்பட்டேன்

### ஜேர்மன் தூதுவர் டுவிட்

(கொழும்பு)

இலங்கையில் அரசாங் கத்திற்கு எதிராக முன்னெடுக் கப்படும் அமைதியான போரா ட்டங்களால் தான் ஈர்க்கப் பட்டுள்ளதாக இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் ஹோல்கர் சீபர்ட் தெரிவித்துள்ளார்.

ஜேர்மன் தூதுவர் ஹோல் கர் சீபர்ட் தனது உத்தியோ கபூர்வ டுவிட்டர் பக்கத்தில் இது குறித்து குறிப்பிட்டுள்ள தாவது, "இலங்கையின் மதிப்புமிக்க மக்கள் தாங்கள் கருத்துச் சுதந் திரத்திற்கான உரிமையை எவ்வளவு அமைதியான முறையில் பயன்படுத்துகிறார்கள் என்பதில் நான் ஈர்க்க ப்பட்டேன்" என பதிவிட்டு ள்ளார். (நி-6)

## தடுமாறும் கொழும்பு அரசியல்
# ஐ.ம.ச ஆட்சி விரைவில்
### முன்னாள் அமைச்சர் ராஜித

(கொழும்பு)

நாட்டில் நிலவும் பொருளாதார பிரச்சினைகளுடன் அரசியல் குழப்ப நிலைகளும் தொடர்ந்த வண்ணம் இருக்கிறது.

இந்நிலையில் விரைவில் அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் பாராளுமன்றில் விவாதங்கள் மற்றும் வாக்கெடுப்பும் நடைபெறவுள்ள நிலையில் அரசாங்கத்திற்கு எதிரான மக்கள் போராட்டமும் நாளுக்கு நாள் விரிவடைந்து வருகிறது.

இந்நிலையில் தற்போதைய அரசாங்கத்தின் நிலை தொடர்பில் கருத்து வெளியிட்ட முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தற்போதைய அரசாங்கம் இன்னும் சில நாட்களுக்கு மாத்திரமே ஆட்சியில் நீடிக்கும் எனத் தெரிவித்ததுடன் விரைவில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சி மலரும் எனத் தெரிவித்தார். தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்கக் கூடிய பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்து பிரதமர் கலந்துரையாடியுள்ளார்.

இதில் வெறும் 88 பாராளுமன்ற உறுப்பினர்களே கலந்து கொண்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு 157 பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ள நிலையில் 70 சதவீத மானவர்கள் கூட மகிந்தவுக்கு ஆதரவளிக்கவில்லை.

அரசாங்கத்தில் இருந்து விலகியுள்ள கட்சிகளுடன் கலந்துரையாடி அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்றத்தில் கொண்டுவரவுள்ளது.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் அனைவருடன் கலந்துரையாடி இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

எமக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மையை விட அதிகமான பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவும் உள்ளது எனவும் தெரிவித்தார். (நி-6)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1988 இந்து நட்சத்திரம்: ரோகிணி கி.பா: 18 சூரி 4 செவ் 12 இல் உயரம்: 5'10"
தகைமை/தொழில்: BSc பட்டதாரி கணித ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரச தொழில் ஆசிரியரும் வேறு வேலையும் விரும்பத்தக்கது
தொ.இல: B/12536

பிறப்பு: 1988 இந்து நட்சத்திரம்: அத்தம் 4 கி.பா: 38½ சூரி 6 செவ் 9 இல் உயரம்: 6'
தகைமை/தொழில்: பொது சுகாதார பரிசோதகர் (P.H.I)
எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம்
தொ.இல: B/12540

பிறப்பு: 1990 இந்து நட்சத்திரம்: சித்திரை 4 கி.பா: 10½ சூரி 4 செவ் 5
தகைமை/தொழில்: H.N.D.E AIT Electrical Srilanka Telecom Assistant (To)
எதிர்பார்ப்பு: படித்த அரச, தனியார் உத்தியோகம்
தொ.இல: B/12541

பிறப்பு: 1988 இந்து நட்சத்திரம்: ஆயிலியம் 3 உயரம்: 5'10"
தகைமை/தொழில்: N.I.I.T (கொழும்பு) தனியார் கம்பனியில் வேலை
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்.
விவாகரத்தானவரும் ஏற்றுக்கொள்ளப்படும்
தொ.இல: B/12544

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1999 இந்து நட்சத்திரம்: பூரம் 4 கி.பா: 32½ சூரி 11 செவ் 5 உயரம்: 159 cm
தகைமை/தொழில்: BSc IT 2 ஆம் வருட மாணவி
எதிர்பார்ப்பு: வெளிநாடு ஆயின் கனடா, லண்டன், அவுஸ்திரேலியா உள்நாடு என்றால் பொறியியலாளர் அல்லது வைத்தியர்
தொ.இல: G/12595

பிறப்பு: 1997 இந்து நட்சத்திரம்: பூரட்டாதி கி.பா: சூரி 4 செவ் 1 இல் உயரம்: 168 cm
தகைமை/தொழில்: கனிஷ்ட பிரிவு பயிற்றுநர் வேலை செய்கிறார்
எதிர்பார்ப்பு: கனிஷ்ட மட்டும்
தொ.இல: G/12597

பிறப்பு: 1990 இந்து நட்சத்திரம்: சுவாதி 3 கி.பா: 38½ சூரி 1 செவ் 7 இல்
உயரம்: 160 cm
தகைமை/தொழில்: H.N.D.E BA Following ஆங்கில ஆசிரியர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச, தனியார் உத்தியோகம்
தொ.இல: G/12596

பிறப்பு: 1986 இந்து நட்சத்திரம்: மூலம் 2 கி.பா: 26 சூரி 2 செவ் 12 இல்
தகைமை/தொழில்: Masters in HRM Human Resources Executive - தனியார்
எதிர்பார்ப்பு: பட்டதாரி வெளிநாடு
தொ.இல: B/9420


கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்: காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 29

# தினை விதைத்தவன் தினை அறுப்பான்



ஸ்காட்லாந்து நாட்டில் ஃப்ளெமிங் என்ற ஒரு ஏழை விவசாயி இருந்தார்.

ஒருநாள் வயலில் வேலை செய்யப் போனபோது உதவி செய்யக் கோரி ஒரு குரல் அருகிலிருந்த சதுப்பு நிலத்தில் இருந்து கேட்டது. தன் கையிலிருந்தவற்றை அப்படியே போட்டுவிட்டு ஓடினார் ஃப்ளெமிங். ஒரு சிறுவன் இடுப்பளவு ஆழத்தில் அந்தப் புதை மணலில் சிக்கிக்கொண்டு, வெளியே வர முடியாமல் தத்தளித்துக் கொண்டிருப்பதை கண்ட ஃப்ளெமிங் அவனை காப்பாற்றினார். ஃப்ளெமிங் இல்லையென்றால் அந்தச் சிறுவன் கொஞ்சம் கொஞ்சமாக புதை மணலில் மூழ்கி இறந்திருப்பான்.

அடுத்த நாள் ஒரு ஆடம்பரமான வண்டி ஃப்ளெமிங் வீட்டு முன்னால் வந்து நின்றது. நேர்த்தியாக உடை அணிந்த ஒரு பிரபு அவ்வண்டியிலிருந்து இறங்கி வந்து நேற்று நீங்கள் காப்பாற்றிய சிறுவனின் தந்தை தாம் என்று அறிமுகம் செய்து கொண்டார்.

"நீங்கள் என் மகனின் உயிரைக் காப்பாற்றினீர்கள். உங்களுக்கு நான் ஏதாவது கொடுக்க விரும்புகிறேன்", என்றார்.

"இல்லை, என்னால் எதுவும் வாங்கிக் கொள்ள முடியாது" என்று பணிவாக மறுத்தார் ஃப்ளெமிங்.

அப்போது அவரது பிள்ளை அவர்களது எளிய குடிசையின் வாசலுக்கு வெளியே வந்தான்.

"அவன் உங்கள் மகனா?" என்று கேட்டார் பிரபு.

"ஆமாம்" என்று பெருமையுடன் கூறினார் ஃப்ளெமிங்.

"அப்படியானால் சரி, நாமிருவரும் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளுவோம். என் பிள்ளைக்குக் கிடைக்கும் அதே மிகச்சிறந்த கல்வியை அவனுக்குக் கொடுக்கிறேன்.

அவன் அவனது தந்தையைப் போலிருந்தால் பிற்காலத்தில் நாமிருவரும் பெருமை அடையக்கூடிய அளவுக்கு வருவான்" என்றார்.

இப்படியாக அவர்களுக்குள் நட்பு மலர்ந்தது.

ஃப்ளெமிங் இன் மகன் மிகச் சிறந்த பள்ளிக் கூடங்களில் படித்து மேல்படிப்புக்காக லண்டனில் உள்ள புனித மேரி மருத்துவப் பள்ளியில் படித்து

உலகம் புகழும் பென்சிலின் கண்டுபிடித்த சர் அலெக்ஸாண்டர் பிளேமிங் ஆனார்.

வருடங்கள் பல கழிந்த பின் பிரபுவின் பிள்ளை நிமோனியாவால் பாதிக்கப்பட்டபோது விவசாயியின் மகன் கண்டுபிடித்த பென்சிலின்தான் அவரைக் காப்பாற்றியது.

அந்த பிரபுவின் பெயர் லார்ட் ரண்டோல்ப் சர்ச்சில்.

அவரது பிள்ளை "சர் வின்ஸ்டன் சர்ச்சில்!"

தினை விதைத்தவன் தினை அறுப்பான்.

வாழ்க்கையில் நல்லது செய்பவனுக்கு எல்லாமே நல்லது தான் நடக்கும்.

**அன்பு வாசகர்களே!**

**முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.**

## லண்டனில் 4 பேர் குத்திக்கொலை

(லண்டன்)

லண்டன் நகரில் 3 பெண்கள் உள்ளிட்ட நான்கு பேர் நேற்று குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

லண்டன் தென்பகுதியிலுள்ள சௌத்வாக் பகுதியில் உள்ள வீடொன்றில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன் சம்பவத்துடன் தொடர்புடைய 5 பேரும் ஒருவரையொருவர் நன்கு அறிந்தவர்கள் என்றும் பொலிஸாரின் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

குறித்த சம்பவத்துடன் சந்தேகத்தின் பேரில் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## பிரான்ஸ்... மக்ரோ...

(பாரிஸ்)

பிரெஞ்சு ஜனாதி... இன்னும் 5 ஆண்டு... கணிப்புக்களில் ... பெற்றுள்ளார்.

58.55% வாக்குகளை மக்ரோன் பெற்றுக்கொண்ட நிலையில் அவருக்கு கடும் போட்டியாளராக இருந்த தீவிர வலதுசாரி

## மேற்குலக நாடுகளில்... ரஷ்ய நிலக்கரி இ... இரட்டிப்பாக்...

(பீஜிங்)

உக்ரைனில் நடந்த போரை சாதகமாகப் பயன்படுத்தி ரஷ்யா கோக்கிங் நிலக்கரி இறக்குமதியை இரட்டிப்பாக்க முயற்சிக்கின்றது.

## பார்வையற்ற சகோதரர்களால் வடிவமைக்கப்பட்ட தேர்



(டில்லி)

சாதனை செய்வதற்கு வயதோ, உடல் ஊனமோ ஒரு தடை இல்லை என்று கூறுவார்கள். அதை உண்மையாக்கும் வகையில் கர்நாடக மாநிலம் பாகல்கோட்டையைச் சேர்ந்த பார்வையற்ற சகோதரர்கள் 29 அடி உயரமான தேரை வடிவமைத்து சாதனை படைத்துள்ளனர்.

தற்போது பல்வேறு துறைகளில் மாற்றுத்திறனாளிகள் தங்களது திறனை வெளிப்படுத்தி சாதனைகளை புரிந்து வருகிறார்கள். இதுபோல கர்நாடக மாநிலம் பாகல்கோட்டையைச் சேர்ந்த பார்வையற்ற சகோதரர்கள் தேரை வடிவமைத்து சாதனை படைத்து உள்ளனர். (நி-6)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சுப கிருது வருஷ புத்தாண்டுப் பலன்கள்

## குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடைபெறும்

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்



(உத்தரம் 2, 3, 4 பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 பாதங்கள் வரை)

பெயரின் முதல் எழுத்துக்கள்: ப, பி, பு, பூ, ண, ட, பே, போ உள்ளவர்களுக்கும்

**கன்னி இராசி வாசகர்களே!**

இந்தப் புத்தாண்டில் குரு பார்வை உங்கள் இராசியில் பதிகிறது. எனவே ஆண்டு முழுவதும், வேண்டிய நற்பலன்கள் வரப்போகிறது. தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். செல்வச் செழிப்புமிக்க வாழ்க்கையும், தேசப்பற்று மிக்கவர்களின் பழக்கத்தால் முன்னேற்றமும் ஏற்படப் போகின்றது. குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெற்று மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**புத்தாண்டின் தொடக்க நிலை**

புத்தாண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசி நாதன் புதன், 8 ஆம் இடத்தில் பன்னிரண்டுக்கு அதிபதியான சூரியனோடு இணைந்து சஞ்சரிக்கிறார். 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜயோகம்' என்பதற்கு ஏற்ப, நல்ல பலன்கள் அதிகமாக இல்லம் தேடி வரப்போகிறது. மறைந்த புதனால் நிறைந்த தனலாபமும், நிறைந்த கல்வியும் கிடைக்கும். எனவே எதிர்பார்த்ததைக் காட்டிலும் தொழிலில் கூடுதலாக இலாபம் கிடைக்கும். நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். சேமிப்பு உயரும். செய்தொழிலில் கிளைத் தொழில்கள் தொடங்கும் வாய்ப்பு உருவாகலாம்.

அஷ்டமத்தில் ராகுவும், இரண்டில் கேதுவும் இருப்பதால் சர்ப்ப தோஷத்தின் பின்னணியில் இருக்கிறீர்கள். வாக்கு ஸ்தானத்தில் கேது இருப்பதால் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாது. அதேநேரத்தில் ஆன்மிகப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள். அன்னதானம், வஸ்திர தானம் போன்றவற்றில் ஈடுபாடு அதிகரிக்கும். செலவிற்கேற்ற வரவு உண்டு. ஒரு காரியத்தை தொடங்கிவிட்டால் எதிர்பார்த்த இடத்தில் இருந்து அதற்குரிய தொகை வந்து சேரும். எனவே அன்றாடப் பணிகள் நன்றாக நடைபெறும். ராகு - கேதுகளுக்குரிய வழிபாடுகளை முறையாகச் செய்வதன் மூலம் முன்னேற்றப் பாதையில் உள்ள முட்டுக்கட்டைகள் அகலும்.

வருடத் தொடக்கத்தில் 6 ஆம் இடத்தில் செவ்வாய், சுக்கிரன் சேர்க்கை பெற்றுள்ளது. 8 இற்கு அதிபதி செவ்வாய் 6 இல் சஞ்சரிப்பது யோகம்தான். அதுவும் தனாதிபதி சுக்கிரனோடு இணைந்து சஞ்சரிப்பதால் உடன்பிறப்புகளின் வழியே உதவிகள் கிடைக்கும்.

கடன் சுமை குறைய வழிபிறக்கும். கவலை அகலும் நேரம் இது. நன்மை அதிகம் நடைபெறும். வருமானம் படிப்படியாக உயரும். கொடுக்கல்- வாங்கல் ஒழுங்காகும்.

உங்கள் இராசிக்கு 5 ஆம் இடத்தில், தன் சொந்த வீட்டில் சனி இருக்கிறார். இதனால் பூர்வ புண்ணிய ஸ்தானம் பலம் பெறுகின்றது. அதனால் வரவேண்டிய யோகங்கள் எல்லாம் வந்து சேரும்.

கசந்த காலங்கள் எல்லாம் இனி வசந்த காலமாக மாறும். குழப்பமான மனநிலை இனி குதூகலமாக அமையும். கவலையான வாழ்க்கை இனி மாறி பணப் புழக்கத்தோடு மகிழ்ச்சியாக அமையும். பாகப்பிரிவினை சுமுகமாக முடியும்.

குரு சப்தம ஸ்தானத்தில் இருந்து பார்ப்பதால் எல்லா நாட்களும் இனிய நாட்களாக அமையலாம். உடல்நலம் சீராகி உற்சாகப்படுத்தும். எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட நோய்இருந்த இடம்தெரியாமல் மறையும். திரும்பும் பக்கமெல்லாம் நன்மை கிடைக்கும் விதத்தில் குருவின் சஞ்சாரம் இருக்கிறது. சுக ஸ்தானம் மற்றும் களத்திர ஸ்தானத்திற்கு அதிபதியான குரு, பலம் பெற்று சஞ்சரிப்பதால் வெளிநாட்டு முயற்சியில் அனுகூலம், புதிய திட்டங்களில் வெற்றி, செய்தொழிலை விரிவுபடுத்துவதில் ஆர்வம், பொருள் சேர்க்கை, சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்து கிடைக்கும்.

**குருவின் பார்வை பலன்**

ஆண்டின் தொடக்கத்தில் மீனத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை, உங்கள் இராசியிலும், 3, 11 ஆகிய இடங்களிலும் பதிகின்றது. எனவே ஆரோக்கியத் தொல்லை அகலும். அன்பும், ஆதரவும்தரும் நண்பர்கள் உறுதுணையாக இருப்பர்.

திட்டமிட்ட காரியங்களை உற்சாகத்துடன் நடத்தி முடிப்பீர்கள். பணத்தேவை உடனுக்குடன் பூர்த்தியாகும். குடும்ப பிரச்சினைகள் குறையும். தெய்வ பலமும், தன்னம்பிக்கையும் உங்களை வழிநடத்திச் செல்லும். அரசாங்கத்தில் இருந்து எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.




வெற்றிகள் ஸ்தானத்தை குரு பார்ப்பதால், உத்தியோகம் தொடர்பாக வெற்றி கிடைக்கும். அதிகார வர்க்கத்தினரின் ஆதரவு கிடைக்கும். அரசியலில் ஈடுபடும் வாய்ப்பு உருவாகும். லாப ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால் தொழிலில் கூடுதல் இலாபம் கிடைக்கும். புனிதப் பயணங்களை மேற்கொள்வீர்கள்.

**சனியின் வக்கிரமும், பெயர்ச்சிக் காலமும்**

25.6.2022 முதல் 9.10.2022 வரை மகரத்தில் சனி வக்கிரம் பெறுகிறார். சனியின் வக்கிர காலத்தில பிள்ளைகளால் சில பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும்.

உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். புதிய நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரலாம். 29.3.2023-இல் கும்ப இராசிக்குச் சனி செல்கிறார்.

அதன் பிறகு தொழில் செய்வோர் புதிய கிளைத் தொழில் தொடங்க முயற்சிப்பர். அதற்கு அரசு வழி ஆதரவும் கிடைக்கும். சங்கிலித் தொடர்போல வந்த கடன் சுமை குறையும்.

**வளர்ச்சி தரும் வழிபாடு**

இந்த ஆண்டு இனிய ஆண்டாக அமைய குரு கவசம் பாடி, வியாழக்கிழமை தோறும் தட்சிணாமூர்த்தியை வழிபட்டு வாருங்கள்.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்தப் புத்தாண்டில் வருடத் தொடக்கத்திலேயே குரு பார்வை பதிவதால் உடல்நலம் சீராகும். உடன்பிறப்புகளும், உடனிருப்பவர்களும் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். கடன் சுமை குறையும். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை அதிகரிக்கும். பிள்ளைகளின் கல்வி மற்றும் கல்யாணம் சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். குரு, சனி வக்கிர காலத்தில் கவனம் தேவை. பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

### தெளிந்த மனம்





(நேற்றைய தொடர்ச்சி)

என்னைக் கல்யாணம் செய்து கொண்டபின் எங்கள் வியாபாரத்தை கவனிக்க முடியாது என்றீர்களாமே. நீங்கள் உங்கள் தந்தையின் தொழிலைத் தொடர்வது உங்கள் கடமை என்றால் என் தந்தையின் ஒரே மகளான நான் என் தந்தையின் தொழிலைத் தொடர்வது என் கடமை இல்லையா? என்று கேட்டாள்.

ஸ்ரீதரன் புன்னகை புரிந்தவாறே "நீ கூறுவது போல இருவருக்கும் கடமை உள்ளது. என்றாலும் உன் தந்தையின் வியாபாரம் அந்த ஊரில் இல்லாது போனாலும் வியாபாரம் செய்ய இன்னும் பல வியாபாரிகள் இருக்கிறார்கள். ஆனால் நான் இங்கிருந்து போய் விட்டால் இங்குள்ள மக்களுக்கு இலவசமாக வைத்தியம் செய்ய யார் இருக்கிறார்கள், ஒருவரும் இல்லையே" என்றான்.

அப்போது ஒரு யாசகன் வந்து "ஐயா! ஒரே பசி. இரண்டு நாளாக எதையும் சாப்பிடவில்லை" என்று கத்தவே ஸ்ரீதரன் தனக்காக வைத்திருந்த பழங்களை எடுத்துக் கொடுத்து விட்டான். அவற்றைச் சாப்பிட்ட அவன் "நீங்கள் நெடுங்காலம் வாழ வேண்டும் தர்மபிரபு" என்று வாழ்த்தி விட்டுப் போனான். அந்தக் காட்சியைக் கண்டதும் நளினிக்கு ஒரு புதிய உண்மை தெரிந்தது. அவள் எதுவும் பேசாமல் எழுந்து நின்றாள்.

ஸ்ரீதரனும் "ஏன் பேசாமல் இருக்கிறாய்?" எனவே அவளும் வெட்கப்பட்டவாறே "நம் கல்யாணத்துக்கு எப்படி எல்லாம் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்றுதான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்.

நாம் வசித்து வர இந்த வீடே போதும்" என்று கூறி புன்முறுவல் பூத்தாள்.

(முற்றும்)

## கம்பராமாயணம்

### ஆரணிய காண்டம்




"இந்தப் பர்ண சாலை உள் இருப்பது யார்?" என்று கேட்டான், பவளக்கொம்பு போன்ற சீதை, "உள்ளே வாருங்கள்" என்று வரவேற்றாள்; அவனும் அவள் தந்த இருக்கையில் அமர்ந்தான்.

"இந்த சாலை யாருடையது? இங்கு உறையும் அருந்தவன் யாவன்? நீவிர் யாவிர்?" என்று கேட்டான்.

"புதியவர் போல இருக்கிறது" என்று அவனிடம் பரிவு காட்டிப் பேசினாள்.

"இராமனும் யானும் அவன் தம்பியோடு இங்கு தங்கி இருக்கிறோம்; அன்னை சொற் கேட்டு இங்கு வந்திருக்கிறோம். அவர் பெயரினை நீங்கள் கேள்விப் பட்டிருப்பீர் என்று நினைகிறேன்" என்றாள்.

"உம்முடைய பெற்றோர் யார்?" என்று கேட்டான். "சனகன் மகள்; என் பெயர் சானகி என்றாள்.

"முதியவரே நீர் எங்கிருந்து வருகிறீர்?"

"இராவணன் திருநகரில் இருந்து வந்திருக்கிறேன்; அவனுக்கு எந்தக் குறையும் இல்லை; எனினும், அவன் ஒரு மங்கையைத் தேடிக் கொண்டிருக்கிறான்" என்றான். "அரக்கர் நகரில் அருந்தவ முனிவராகிய நீர் எப்படித் தங்கி இருந்தீர்" என்று கேட்டாள்.

"நீ கருதுவதுபோல அரக்கர் தீயவர் அல்லர்" என்றான்.

"தீயவர்களோடு சேர்கிறவர்கள் நல்லவர்களாய் இருக்க முடியாதே"

"வல்லமை உடையவர் அரக்கர்; அவர்களை அனுசரித்து வாழ்வதுதான் அறிவுடைமை" என்றான். "அரக்கரை அடியோடு ஒழிக்க இராமன் காத்திருக்கிறான்; அவர்கள் அழிந்த பின்னரே உலகம் சீர்படும்" என்றாள்.

"மனிதர் வலியவரான அரக்கரை அழிப்பார் என்பது ஏற்றுக் கொள்ள முடியாது; யானைக் கூட்டத்தை ஒருசிறு முயல் வெல்லாது; ஆண் சிங்கத்தை ஒரு மான் குட்டி எப்படி வெல்லும்?" என்று கேட்டான்.

"இராமன் விராதனையும் சூர்ப்பனகையையும், கரன் முதலானவரையும் கொன் றது உமக்குத் தெரியாது போலும்! ஆண் சிங்கம் என்பது இராமன்தான்; அரக்கர்தாம் மான் கூட்டம்" என்றாள். "இராவணன் ஆற்றல் மிக்கவன்; அது தெரியாமல் நீ பேசுகிறாய்" என்றான். "பரசுராமனை வென்றவன் இராமன்; அவன் ஆற்றலை நீ அறியாமல் பேசுவது வியப்பாக இருக்கிறது" என்றாள். அவன் பெருஞ்சினம் கொண்டான்; அதனால் அவன் மாய வேடமும் மறைந்தது; தன் முன்னால் இருப்பவன் இராவணன் என்பதை சீதை அறிந்தாள்; அவனிடமிருந்து தப்பிச் செல்ல வழியறியாமல் தவித்தாள்.

"தேவர் எனக்கு ஏவல் செய்கிறார்கள்; புழுக்களைப் போல வாழும் மானிடர் அரக்கனாகிய என்னிலும் வலியவர்" என்று பேசுகிறாய்; உன்னைப் பிசைந்து தின்று விடுவேன்; அதன்பின் நீ இல்லாமல் நான் வாழ முடியாது என்பதால் தான் தயங்குகிறேன்" என்றான்.

"நீ கவலைப்படாதே; என் செல்வச் சிறப்பில் நீ மகிழ்ச்சியோடு இருக்கலாம்" என்று தொடர்ந்தான்.

"நான் இராமன் மனைவி; நீ நாயினும் கேடானவன்; இராமனது கொடிய அம்பு பாய்வதன்முன் தப்பி ஓடிவிடு!" என்று கூறினாள். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல சேவை செய்வதற்குரிய ஆற்றலை கெட்ட மனிதனிடம் ஒருநாளும் காணமுடியாது.
– பர்க்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஆசிரியர் தொழிற்சங்கங்களுக்கு எழுதுகின்ற ஓர் அவசர மடல்

நாட்டிலுள்ள அத்தனை ஆசிரியர் தொழிற்சங்கங்களுக்கும் அன்பு வணக்கம்.

இக்கடிதம் தங்களுக்கு அவசரமாக எழுதப்படுகிறது.

இக்கடிதத்தின் நோக்கமெல்லாம் எமது மாணவச் செல்வங்களின் கல்விச் செயற்பாட்டுக்குக் குந்தகம் ஏற்படாமல் இருப்பதற்கானது.

ஆம், எமது மாணவர்களின் பாடசாலைக் கல்வியானது 2020ஆம் ஆண்டின் முற்பகுதியில் இருந்து இன்றுவரை தடைப்பட்டு வருவது மிகுந்த வேதனைக்குரியது.

கோவிட் – 19 தொற்றுக்காரணமாக பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட விடுமுறை காரணமாக வருடக்கணக்கில் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டது.

இதற்கு மேலாக, நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளும் பாடசாலைகள் இயங்குவதற்குத் தடையாக அமைந்தன.

இதனால் பாடசாலைக் கல்வியை மாணவர்கள் இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை உருவாயிற்று.

இதனால் ஏழை மாணவர்கள் மிகுந்த பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

இதற்கும் மேலாக, பாடசாலைக் காலம் என்பது தனித்து கல்வி கற்றல் என்பதோடு மட்டும் அதன் வகிபங்கு முடிந்து விடுவதில்லை.

மாறாக இணைப்பாட விதான செயற்பாடுகள், தலைமைத்துவப் பண்புகள், ஆற்றலை வெளிப்படுத்துகின்ற சந்தர்ப்பங்கள், ஒழுக்கம் மற்றும் பண்பாட்டு விழுமியங்கள், கூட்டுப் பிரார்த்தனைகள் என பல்வகை ஆளுமைப்பண்புகளை மாணவர்கள் கற்றுக் கொள்ளும் செயற்பாட்டிலும் ஈடுபடுகின்றனர்.

இந்நிலையில் பாடசாலைகள் இயங்காமை காரணமாக மாணவச் செல்வங்கள் இவற்றை இழக்க வேண்டியதாகிறது.

இஃது மாணவர்களுக்கு ஏற்பட்ட மிகப் பெரிய பாதிப்பாகும்.

இந்நிலையில் ஆசிரியர் தொழிற்சங்கங்கள் முன்னெடுக்கக்கூடிய போராட்டங்களும் பாடசாலைகளை இயங்காமல் செய்து, மாணவர்களின் பாடசாலைக் கல்விச் செயற்பாட்டுக்குப் பாதகமாக இருக்குமாயின் அது மிகத் துன்பமான விடயமாகும்.

எனவே ஆசிரியர் தொழிற்சங்கப் போராட்டங்கள் எந்தவகையிலும் பாடசாலைகளின் இயங்கு நிலைக்குத் தடையாக இருக்கக் கூடாது என்பதில் ஒவ்வொரு ஆசிரியர் தொழிற்சங்கங்களும் உறுதியாக இருக்க வேண்டும்.

## களவு எடுத்த இடத்திலேயே மோ.சைக்கிளை விட்டுச் சென்ற திருடன்

### யாழ்.கல்லுண்டாயில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

களவு எடுத்த இடத்திலேயே மோட்டார் சைக்கிளை திருடன் ஒருவன் விட்டுச் சென்றுள்ளான்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்லுண்டாய் வைரவர் கோவில் பகுதியில் இயக்க நிலையில் இருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று திருட்டு போயிருந்தது.

மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் வேலை முடிந்து வரும் வழியில் கோவில் உள்ளதால் மோட்டார் சைக்கிளை வீதியில் இயக்க நிலையில் நிறுத்திவிட்டு கோவிலை தரிசித்துக் கொண்டிருந்தார்.

இதன்போது அங்கிருந்த திருடன் மோட்டார் சைக்கிளின் உரிமையாளரது கண் முன்னாலேயே மோட்டார் சைக்கிளை திருடிச் சென்றுள்ளான்.

இச்சம்பவத்தை கண் முன்னாலேயே பார்த்தும் தனது மோட்டார் சைக்கிளை காப்பாற்ற முடியாத மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்நிலையில் நேற்று மாலை வேளையில் அவரது மோட்டார் சைக்கிளானது திருட்டு போன இடத்திற்கு அருகாமையில் உள்ள வீதியில் நிறுத்தப்பட்டிருந்தது.

இதனையடுத்து மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் மோட்டார் சைக்கிளை எடுத்துச் சென்றார். (ம-7,104)

## அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைய வாய்ப்பு

### இறக்குமதியாளர்கள் சங்கம்

(கொழும்பு)

அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் சிறிதளவு குறைய வாய்ப்புள்ளதாக அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்திய கடன் திட்டத்தின் கீழ் பொருட்களை இறக்குமதி செய்வது ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், இவ்வாறு எதிர்பார்ப்பதாக அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

அடுத்த இரண்டு வாரங்களுக்குள் இந்திய கடன் திட்டத்தின் கீழ் பொருட்களை இறக்குமதி செய்வதை ஆரம்பிக்க முடியும் என அதன் பேச்சாளரான நிஹால் செனவிரத்ன தெரிவித்துள்ளார். (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன் கிழமை 27 ஆம் திகதி காலை 8.00 மணியிலிருந்துமாலை5மணிவரை

**யாழ் பிரதேசத்தில்** மட்டுவில் வீதி- புத்தூர், ஊரணி, வீரவாணி ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** சாஸ்திரி கூழாங்குளம், சமயபுரம், சமணங்குளம், நெளுக்குளம் நீர்வழங்கல் சபை, அறுகம் புல் வேலி, பாரதிபுரம், கூமாங்குளம், நகாரிலுப்பைக்குளம், நெளுக்குளம் கலைமகள் பாடசாலையடி, நொச்சிக்குளம், அவுசடப்பிட்டிய, பாண் சின்னக்குளம், பொன்னாவரசங்குளம், இராஜேந்திரக்குளம், சாம்பல்தோட்டம் வீட்டுத்திட்டம், விநாயகபுரம் வீட்டுத்திட்டம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## மூளாய் - வேரம் பகுதியில் வீடு புகுந்து நகைகள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மூளாய் - வேரம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்த ஒரு இலட்சம் பெறுமதியான தங்க ஆபரணம் களவாடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

குறித்த பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றின் திருவிழா நேற்று நடைபெற்றது. வீட்டில் உள்ளவர்கள் ஆலயத்திற்கு சென்று தரிசித்துவிட்டு வீட்டிற்கு திரும்பி வந்து பார்த்தவேளை வீட்டில் இருந்த நகை களவாடப்பட்ட விடயம் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-7,104)

## அபிவிருத்தித் திட்டங்கள் இடையில் நிறுத்தப்பட்டன

(கொழும்பு)

தற்போது ஏற்பட்டுள்ள அரசியல், சமூக ஸ்திரமற்ற நிலைமையை காரணமாக இலங்கைக்குள் நடைபெற்றுவந்த அபிவிருத்தித் திட்டங்களுக்கு வழங்கிய நிதியுதவிகள் அனைத்தையும் நிறுத்த சம்பந்தப்பட்ட நாடுகளின் வெளிநாட்டு அமைப்புகள் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரியவருகிறது.

இதன் காரணமாக நாடு முழுவதும் ஆரம்பிக்கப்பட்ட பல அபிவிருத்தித் திட்டங்கள் இடை நடுவில் நிறுத்தப்பட்டுள்ளதாக அறியக்கிடைத்துள்ளது. (ம-7)

## வட்டுக்கோட்டையில் சாராயத்துடன் ஒருவர் கைது

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வட்டுக்கோட்டை பகுதியில் 23 கால் போத்தல்கள் சாராயத்துடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு வட்டுக்கோட்டை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, சட்ட விரோதமாக விற்பனைக்காக வைத்திருந்த சாராய போத்தல்களுடன் குறித்த சந்தேகநபர் இவ்வாறு கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (ம-7,104)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



### பராசக்தி

❖ மனிதனின் சாதாரணமான அன்பு தழைப்பது கைம்மாறு கிடைக்கும் இடத்தில் தான் அன்பு அன்பாகவே செய்யப்படாத போது வெறுப்பும் அலட்சியமும் ஏற்படுகின்றன. இது இயற்கை தான்.

❖ ஆனால் எங்கோ ஒரு சில இடங்களில் தனது அன்பு திரும்பக் காட்டப்படாத போதும் கூட அன்பு காட்டுவதைக் காணலாம். விட்டில் பூச்சி தீயிடம் காட்டும் அன்பை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

❖ விட்டில் பூச்சியானது தீயை விரும்பி அதிலேயே விழுந்து இறக்கிறது. இப்பூச்சியின் அன்பின் இயல்பே இப்படித்தான் அமைந்துள்ளது. அன்பு செலுத்தவே அன்பு என்ற நிலை, உலகத்தில் காணப்படும் உயர்ந்த சுயநலமற்ற அன்பிற்கு ஒரு நல்ல, மறுக்க முடியாத எடுத்துக்காட்டாகும். ஆன்மீக நிலையில் இப்படிப்பட்ட அன்பு வெளிப்படும் போது ஒரு பராசக்தியை நாம் அடைவதற்கு நாம் தகுதி உள்ளவர்களாக ஆக்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலை நிறுத்தத்திற்கு தயாராகும் ரயில்வே தொழிற்சங்கங்கள்

(கொழும்பு)

நாட்டில் முன்னெடுத்துவரும் அரசுக்கு எதிராக மக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கும் வகையில் ரயில்வே தொழிற்சங்கங்கள் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, நாளை நள்ளிரவு தொடக்கம் நாளை மறுதினம் நள்ளிரவு வரையில் இவ்வாறு வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளது

இந்த வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு பிரதான தொழிற்சங்கங்கள் பலவும் தமது ஆதரவை வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# சவப்பெட்டிகளுக்கும் தட்டுப்பாடு

(கொழும்பு)

நாட்டில் சவப்பெட்டிகள் இல்லாத காரணத்தால் மலர்ச்சாலை உரிமையாளர்கள் பெரும் சிக்கலுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

சவப்பெட்டிகளின் உற்பத்தி குறைந்துள்ளதால் மலர்ச்சாலை உரிமையாளர்களும் , அதேபோல் இறந்த நபர்களின் உறவினர்களும் பெரும் சிரமத்தை எதிர் நோக்கியுள்ளனர்.

சவப்பெட்டிகளை தயாரிக்கும் பலகை வகைகள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது.

இந்தப் பலகைகளில் தயாரிக்கும் சவப்பெட்டிகள் அதிக விலைக்கு விற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதுடன் போதிய பலகைகள் கிடைக்காத காரணத்தால் சவப்பெட்டிகளைத் தயாரிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் மலர்ச்சாலை உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். (நி-6)

# வழக்கு விசாரணை நிறைவு பெறும் வரை கப்ரால் வெளிநாடு செல்லத் தடை

(கொழும்பு)

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் வெளிநாடு செல்வதற்கு தடை விதித்து கோட்டை நீதவான் நீதிமன்றத்தினால் நேற்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அரச நிதியை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியமை தொடர்பான வழக்கு விசாரணை நிறைவு பெறும் வரை அஜித் நிவாட் கப்ராலுக்கு வெளிநாட்டு பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது. (நி-6)

# நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு இ.தொ.கா ஆதரவு

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானித்துள்ளதாக அதன் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் தனது டுவிட்டர் பதிவொன்றில் தெரிவித்துள்ளார்.

கட்சி உறுப்பினர்களுக்கு இடையிலான விரிவான கலந்துரையாடலுக்கு பின்னர் அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரும் பட்சத்தில் அதற்கு ஆதரவாக வாக்களிக்க ஏகமனதாக தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி மற்றும் சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தனது டுவிட்டர் பதிவில் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை முன்னதாக அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்பில் நடுநிலை வகிப்பதற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# கொடிகாமத்தில் சங்கிலி அறுப்பு

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட போக்கட்டிப் பகுதியில் கடந்த சனிக்கிழமை கணவனுடன் மோட்டார் சைக்கிளில் சென்ற பெண்ணின் ஒன்றரைப் பவுண் சங்கிலி அறுக்கப்பட்டிருப்பதாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கணவனுடன் பயணித்த பெண்ணை இரவல் மோட்டார் சைக்கிள் ஒன்றில் பின் தொடர்ந்து சென்றவர்கள் சங்கிலி அறுத்துக்கொண்டு தப்பித்துச் சென்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த கொள்ளைச் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் உரிமையாளரை பொலிஸார் கைது செய்துள்ள போதிலும் திருட்டு சந்தேக நபர் தலைமறைவாகியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (4-6-30)


## கேள்வி அறிவித்தல்

**குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை வேலைத் திட்டம் (PSDG) -2022**
**உள்ளூராட்சி திணைக்களம்**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை**

1. பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதி குறித்த வேலைத்திட்டத்திற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்து வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
2. தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் Water supply and sewerage அமைப்புக்கான சிடா (CIDA) பதிவினை மேற்கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule 5) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
5. குறித்த பெறுகை 03/2020, 03/2020 (i) இலக்கங்களை உடைய 09.10.2020, 11.01.2021 ஆம் திகதிகளின் பொது நிதி சுற்றுநிருபங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை (தொலைபேசி 021-205-0037, தொலைநகல்** 021-205-0036, **E-Mail: pallaips @gmail.com**) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் 14:00 மணிவரை 26.04.2022 ஆம் திகதியிலிருந்து 16.05.2022 ஆம் திகதி காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் **தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை** எனும் இடத்திலிருந்து 26.04.2022 ஆம் திகதியிலிருந்து 16.05.2022 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மட்டும் காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2,000/- (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
8. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் இரு பிரதிகளில் தயாரித்து **தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை** எனும் முகவரிக்கு 16.05.2022 ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்வியானது கேள்விகள் சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 63 நாட்கள் (அறுபத்து மூன்று நாட்கள்- 18.07.2022) வரையும் செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி அடையாள இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை VAT நீங்கலாக (Rs Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு(Rs) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/45 (3)/PL/PS DG/w/4/ 2022 | Construction of open dug well, water ta nk 1000 gal en & plumpi ng works at vannankerny | 3.006 Mn | 90 நாட்கள் | C8 and C7 ( Water supply and sewerage;) | 31,000.00 | 18.07.2022 |

11. கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 05.05.2022 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.
12. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

**தவிசாளர்**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.** 26.04.2022 (C-4234)



## கண்ணீர் அஞ்சலி

அமரர். **சடாச்சரலிங்கம் ஞானமலர்**

எமது பாடசாலையின் ஆசிரியை திருமதி. **அகிழினி கிரிசாந்தன்** அவர்களின் பாசமிகு மாமியார் அமரர். **சடாச்சரலிங்கம் ஞானமலர்** அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**

(சி-4239)



மலர்வு -26.12.1946 உதிர்வு -16.02.2022

ஆசிரிய சகோதரத்துவம்
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

## கண்ணீர் அஞ்சலி



மலர்வு -19.01.1950 உதிர்வு -02.03.2022

அமரர். **கந்தசாமி அற்புதராணி**

எமது பாடசாலையின் ஆசிரியர் திரு. **மாணிக்கம் சுஜீபவி** அவர்களின் பாசமிகு மாமியார் அமரர். **கந்தசாமி அற்புதராணி** அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**

(சி-4238)

ஆசிரிய சகோதரத்துவம்
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகிந்த பதவி விலக

# ஒரு வார கால அவகாசம்

### உதய கம்மன்பில



(கொழும்பு)

பிரதமர் பதவியிலிருந்து விலகுவதற்கு ஒரு வார கால அவகாசம் வழங்கப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியினால் கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு தாம் உள்ளிட்ட 120 உறுப்பினர்களின் ஆதரவு காணப்படுவதன் காரணமாக இந்த கால அவகாசம் வழங்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (ம-7)

## அவசர நிதி...

இத்தாலி அரசாங்கம் இலங்கைக்கு அவசர உதவியாக 125 மில்லியன் ரூபாயை வழங்க முன்வந்துள்ளது.

இலங்கைக்கான இத்தாலிய தூதரகம் இதனைத் தெரிவித்துள்ளது.

இந்த நிதியானது மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு வழங்கப்படவுள்ளதாக தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-7)

## அலரிமாளிகை...

தொடர்பாக பொலிஸாரினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை நீதிமன்றினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

அலரிமாளிகைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுவரும் குழுவினரை அப்புறப்படுத்துமாறுகோரி கொள்ளுப்பிட்டி பொலிஸாரினால் கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றில் அறிக்கையொன்று முன்வைக்கப்பட்டது.

இந்நிலையில், இதனை ஆராய்ந்த கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷண கெகுணவல, இந்த கோரிக்கையை நிராகரித்துள்ளார். (ம-7)

## சீமெந்து...

கப்படவுள்ளது.

இந்த விலை அதிகரிப்பானது இன்று முதல் அமுலாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## ராஜபக்ஷ...

யின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“அரசுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்குப் பெரும்பான்மைப் பலம் கிடைத்துள்ளது.

எதிரணியில் உள்ளவர்களும் அரசிலிருந்து வெளியேறிசுயாதீனமாகச் செயற்படுபவர்களும் மற்றும் அரசுக்குள் இருக்கும் அதிருப்தியாளர்களும் என 113 இற்கும் மேற்பட்டோர் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கத் தயாராகவுள்ளனர்.

எனவே, இந்த அரசு உடனடியாகக் கௌரவமாகப் பதவி விலக வேண்டும். இல்லையேல் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஊடாக இந்த அரசை அகற்றுவோம்” என்றார். (ம-7)

## 21ஆவது திருத்...

21ஆவது திருத்தச்சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கான யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போதே இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், இதற்காக அமைச்சரவை உப குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## ஈஸ்டர் தாக்குதல்...

காலில் பரிசுத்த பாப்பரசரை நேற்று சந்தித்தனர்.

கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இவ்வாறு பாதிக்கப்பட்ட 60 பேரை கடந்த வாரம் வத்திக்கான் நோக்கி அழைத்துச் சென்றிருந்தார்.

இந்நிலையிலேயே பேராயர் தலைமையில் மேற்படி பாதிக்கப்பட்ட 60 பேர் பரிசுத்த பாப்பரசரைச் சந்தித்து அவரது ஆராதனைகளிலும் கலந்துகொண்டனர்.(ம-7)

## நெருக்கடி...

பொருளாதார பிரச்சினையை தீர்ப்பதற்கு அதிரடியான நடவடிக்கைகளை எடுப்பேன். அத்துடன் அரசியலமைப்பு திருத்தம் பாராளுமன்றத்தின் ஊடாக முன்னெடுக்கப்படும் என்றும் அவர் மகா நாயக்க தேரர்களுக்கு அறிவித்துள்ளார்.

தற்போதைய அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பதற்கும் எமது நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்கும் அனைத்து அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க நீங்கள் முன்மொழிந்தால்,

எனது முழு ஆதரவையும் வழங்குவேன் என்பதை நான் மரியாதையுடன் நினைவுகூருகிறேன் என மூன்று நிக்காயாக்களினதும் தலைமை பீடாதிபதிகளுக்கு ஜனாதிபதி அனுப்பிய பதில் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் பாராளுமன்றத்தில் உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் மூன்று நிக்காயாக்களினதும் தலைமை பீடாதிபதிகளால் 2022.04.20 ஆம் திகதி அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்துக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதில் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அதிலேயே மேற்படி விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-7)

## சமகால நிலைமை...

தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் நேற்றைய தினம் அமெரிக்கத் தூதுவர் ஜூலிசங்கை சந்தித்து கலந்துரையாடினர்.

நேற்று மாலை கொக்குவிலில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்டோரே இந்த கலந்துரையாடலில் பங்கேற்றனர். (ம-7)

## பதவி விலகு...

அல்லது நாளை பதவி விலகத் தீர்மானித்திருப்பதாக தென்னிலங்கைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாளுக்கு நாள் அதிகரித்துவரும் தொடர் அழுத்தம் மற்றும் மக்கள் எதிர்ப்பலைகளால் அவர் குறித்த தீர்மானம் மேற்கொள்ள முன்வந்திருப்பதாக தெரிய வந்துள்ளது.

இதனிடையே ஆளும் கூட்டணியின் முன்னாள் முக்கியஸ்தராக விளங்கிய உதய கம்மன்பில, 120 எம்.பிக்கள் அரசாங்கத்துக்கு எதிரான நிலைப்பாட்டினை எடுப்பதற்கு தமக்கு உத்தரவாதம் வழங்கியிருப்பதாகத் தெரிவித்திருக்கின்றார்.

அதன் அடிப்படையில்,

ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தேசிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் 65 பேர், சுயாதீனமாக செயற்படவுள்ளதாக அறிவித்துள்ள உறுப்பினர்கள் 39 பேர், கடந்த வாரம் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதிய பொதுஜன முன்னணி உறுப்பினர்கள் பத்துப் பேர் மற்றும் டலஸ் அழகப்பெரும, சரித்த ஹேரத், நாலக கொடஹேவா ஆகியோருடன் பொதுஜன முன்னணியின் 13 பேர், அரசாங்கத்திலிருந்து கடந்த வாரம் வெளியேறிய முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவர் ஆகியோரே அரசாங்கத்துக்கு எதிரான தீர்மானத்திற்கு ஒத்துழைக்கவுள்ளதாக உதய கம்மன்பில தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் அரசாங்கத்துக்கு எதிரான நிலைப்பாட்டில் 122 பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளமையால் அந்த எண்ணிக்கை அதிகரிப்பதற்கான சூழலே காணப்படுவதால் வாக்கெடுப்பு நடைபெற்று அதன்மூலம் பதவி இழப்பு ஏற்படக்கூடும் என்பதால் அதனை விரும் பாததால் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தாமாகவே பதவி விலகல் குறித்த அறிவிப்பை வெளியிடத் தயாராகியிருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்குறித்த பதவி விலகல் முடிவு உத்தியோகபூர்வ அறிவிப்பாக வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)


மெகா பவர்
திகதி 25/04/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1091
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
M 11 36 46 63 72

HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.04.25
சீட்டிழுப்பு இலக்கம் 052
வெற்றி இலக்கங்கள்
மகரம் 26 39 41 58 மகரம்

மஹஜன சம்பத
திகதி 2022/04/25
சீட்டிழுப்பு இலக்கம் 4743
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
S 2 4 2 2 8 2
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.04.25
சீட்டிழுப்பு இலக்கம் - 773
O 01 17 66 72
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1720 நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2022 / 04 / 25 தினம் திங்கள்
Z 27 32 64 76
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூபா 58,492,615/-

சனிதா Shanida
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.04.25
சீட்டிழுப்பு இல: 3881
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,618,320/-
வெற்றி இலக்கங்கள்
02 49 51 57 E

ராசி
திகதி 2022-04-25
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/-
சீட்டிழுப்பு வாரம் 3432
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 12 17 27 48
6470607
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,603,180/-

12 வாசனா
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
O 34 01 22 23 70
சீட்டிழுப்பு வாரம் 896
வர்ணம் இள நீலம்
2022.04.25 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 232,836,721/-

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1830
சீட்டிழுப்பு திகதி 2022 / 04 / 25
வெற்றி இலக்கங்கள்
18 43 48 70 J
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 33,614,496/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1546
சீட்டிழுப்பு திகதி: 2022.04.25
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,796,480/-
வெற்றி இலக்கங்கள்
12 15 30 36 X


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சவர்க்காரத்தின் விலை சடுதியாக அதிகரிப்பு!

(கொழும்பு)

சவர்க்காரத்தின் விலையை 100% இக்கும் மேல் அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக சவர்க்கார இறக்குமதி யாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, இலங்கையில் 70 ரூபாய் பெறுமதியான சவர்க்காரத்தின் விலை 115 ஆகவும், 75 ரூபாயாக இருந்த சவர்க்காரத் தின் விலை 145 ஆகவும் அதிகரிக்கப்பட் டுள்ளது.

இதேவேளை சிறுவர்களுக்கான சவர்க்



காரத்தின் விலை 74 இல் இருந்து 175 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதாக சவர்க்கார இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(ம-7)

# புலிகளின் தலைவர்கூட இவ்வாறு செய்திருக்கமாட்டார்

## பாராளுமன்ற உறுப்பினர் ஹர்சன

(கொழும்பு)



விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இருந்திருந்தால்கூட இவ்வாறு செய்திருக்கமாட்டார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்சன ராஜகருணா தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட் டுள்ளார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

இந்த அரசாங்கத்தை பதவி விலகு மாறு மகாநாயக்கர்கள் உட்பட அனைவ ரும் கோரிக்கை விடுக்கின்ற நிலையில் அரச தலைவரும் பிரதமரும் காது கேளா தது போலவும் கண் தெரியாதது போலவும் நடந்து கொள்கின்றனர்.

வீதிகளில் நிலையான வீதித்தடை களை பொருத்தியுள்ளனர். சில வீதித் தடைகளை முட்கம்பிகள் கொண்டு உரு வாக்கியுள்ளனர். இதனால் மக்களுக்கு பாரிய விளைவுகள் ஏற்பட்டிருக்கலாம். முட்கம்பி ஏதேனும் கண்களில் பட்டு இருந்தால் காலம் முழுவதும் பார்வை யற்றவராகும் நிலை ஏற்படலாம்.

இப்படியான கொடூரமான சம்பவங்கள் தொடர்பில் மனித உரிமைகள் தொடர்பான இயக்கங்கள் தமது கண்டனத்தை வெளி யிட்டிருந்தன. எனினும் கருத்துக்களை தெரிவிப்பது மாத்திரம் போதாது.

இவ்வாறான நடவடிக்கைகளை எடுத்த வர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்துகிறோம்.

நாங்கள் ஒரு கட்சியாக அதற்கான நடவடிக்கையை எடுக்க எதிர்பார்த்துள் ளோம்.

இந்த நாட்டின் தலைவராக பிரபாகரன் இருந்திருந்தால் அவர்கூட இப்படி செய்தி ருப்பார் என நான் நினைக்கவில்லை.

சிலர் தெரிவித்தார்கள் ஹிட்லர் போன்ற ஒரு தலைவர் தேவையென, அப்படியாயின் ஹிட் லர் போன்ற தலை வராகவா முயற்சி கள் மேற்கொள் ளப்படுகிறது என அவர் கேள்வியெ ழுப்பியுள்ளார்.

(ம-7)


பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு
A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
(C-4231)
எமது கிளைகள்
● பயிற்சிக்கால கைக்கத்தொகை -15'000/-
● பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
● பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
● வேலையின்போது ஆரம்ப சம்பளம் -20'000/-
49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம்.
0777-068-777

உடனடி வேலை வாய்ப்பு
யாழ் நகரப்பகுதியில் உள்ள நிறுவனத்தில் சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு வேலைக்கு ஆள் தேவை (C-4231)



சம்பளம் - 30'000/-
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A.சப்பல் லேன். யாழ்ப்பாணம்.
0777-068-777

வாடகைக்கு
யாழ். கச்சேரிக்கு அண்மையாக A9 வீதியில் கடைத் தொகுதி வாடகைக்கு உண்டு.
(26 X 57 அடி)
புதிதாக திருத்தம் செய்யப்பட்டது.
அலுவலக / Food Cityக்கு உகந்த இடம்.
(C-4253)
077 279 8192

Laptop விற்பனை
Compaq Presario F700, 240GB SSD, 3GB Ram
17,500/=
(11163)
தொடர்பு:- 077 996 9661

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (11167)
076 825 7716 (ஆகாஸ்)


# மரண அறிவித்தல்



மலர்வு 02 - 08 - 1950

உதிர்வு 22 - 04 - 2022

## திரு. கந்தசாமி சிவபாலன்

( Tractor கிளியண்ணா )

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கந்தசாமி சிவபாலன் அவர்கள் கடந்த 22.04.2022 (வெள்ளிக்கிழமை) அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி கந்தசாமி தம்பதியரின் ஐந்தாவது மகனும் காலஞ்சென்ற திரு. திருமதி சிவகுரு தம்பதியரின் மருமகனும் கலைவாணி (மாலா) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சந்திரசேகரம் (குட்டி), சாந்தகுணராசா (அப்புக்குட்டி), காலஞ்சென்ற சத்தியதேவி (சத்தி), தருமகுலசிங்கம் (சின்னக்கட்டி), இன்பமலர் (குஞ்சு), திசைராசா (சிங்கன்), காலஞ்சென்ற ஞானசேகரம் (கண்டன்), தேவமலர் (வண்ணம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சாந்தரூபி, யோகராசா, ஜெயலக்சுமி, குகதாசன் (GM), ஜெயறஞ்சினி, தெய்வேந்திரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் கவிதா, சிவரூபன் (ரூபன்), ஜீவிதா, ஜெயந்திகா, றசித்தா, காலஞ்சென்ற துவாரகா, உஷாந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிறேம்நாத், கிந்துசன், சுரேஸ்குமார் ஆகியோரின் அன்பு மாம னாரும் ஆதியா, ஷமீரா, அத்விக் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (27.04.2022) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கரம்பவானி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-4233)

வீரபத்திரர் கோவிலடி, உடுப்பிட்டி.
077 844 7858 - ரூபன்
077 416 9960 - உஷாந்தன்
தகவல் : குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## மங்களேஸ்வரி சேதுலிங்கம்

(ஆசிரியை - நு/ டலோஸ் தமிழ் மகா வித்தியாலயம், யா/ஹாட்லிக் கல்லூரி, அதிபர் - யா/வல்வை மகளிர் மகா வித்தியாலயம், யா/ வல்வை றோ. க.த.க. பாடசாலை, முன்னாள் உப அதிபர் - யா/ வேலாயுதம் மகா வித்தியாலயம் )

பிறப்பு - 23.10.1959
இறப்பு - 25.04.2022



வல்வெட்டித்துறை குச்சம் ஒழுங் கையைப் பிறப்பிடமாகவும் பருத்தித் துறை சிவன் கோவிலடியை வசிப் பிடமாகவும் கொண்ட மங்களேஸ்வரி சேதுலிங்கம் (ரெத்தினா) அவர்கள் நேற்று (25.04.2022) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆதிநாராய ணசாமி - பங்கையற்செல்வம் (பட்டம்மா) தம்பதியரின் அன்பு மகளும் காலஞ் சென்ற இராசையா - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சேதுலிங்கம் அவர்க ளின் அன்பு மனைவியும் அனோஜன், அனோதா, அனோசுஜன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சிந்துஜா, செந்தாழன், நிஷாந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும் தரணியின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற நாகேஸ்வரி, காலஞ்சென்ற ஜெயச்சந்திரன் (கலிங்), தங்கேஸ்வரி, ஜெகதீஸ்வரி, இராஜேஸ்வரி, சுந்தரேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற கிருஸ்ணவேணி, காலஞ்சென்ற சுந்தரலிங்கம், காலஞ்சென்ற ஆதிமூலம், தியாகலிங்கம், காலஞ்சென்ற கமலவேணி, ஸ்ரீபத்மவேணி, காலஞ்சென்ற சாரதாவேணி, காலஞ்சென்ற பஞ்சலிங்கம், ஈஸ்வரலிங்கம், சத்தியவேணி, பத்மநாதன், கனகேந்திரராணி, காலஞ்சென்ற பழனிவேல், காலஞ்சென்ற தவமனோகரன், இராமச்சந்திரன், கவிஞன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற ராஜ்குமார், ஜெயராணி, பத்மாவேணி, காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை, காலஞ்சென்ற ஏரம்பமூர்த்தி, காலஞ்சென்ற தங்கத்துரை, காலஞ்சென்ற சுசீலாதேவி, ஸ்ரீயாகாந்தி, ஆதித்தன் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (27.04.2022) புதன்கிழமை மாலை பருத்தித்துறையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று மாலை 4.00 மணியளவில் பூதவுடல் வல்வெட்டித்துறைக்கு எடுத்துச் செல்லப்பட்டு மாலை 5.00 மணியளவில் ஊறணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள் ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அனோஜன் (மகன்) 077 838 3837
அனோதா (மகள்) 076 879 1538
அனோசுஜன் (மகன்) 077 494 3135
சுந்தரேஸ்வரி (சகோதரி) 077 442 6873
(C-4241)
தகவல் :- குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.04.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.